விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 199 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 21 வியாழக்கிழமை (06.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## யாழ்.பல்கலை, முல்லைத்தீவில் கரும்புலிகள் நாள் நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)
பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் யாழ்.பல்கலைக்கழக வளாகம் மற்றும் முல்லைத்தீவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகளின் நாள் நினைவேந் தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கரும்புலிகள் நாள் நினைவேந்தல் நேற்று மதியம் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தின் கரும்புலி களின் நினைவுருவ படத் 15



## பாராளுமன்றக் குழுக் கூட்டங்களில்
# எதிர்க்கட்சித் தலைவர் பங்கேற்கத் தடை
### சபாநாயகர் அறிவிப்பு



(கொழும்பு)
பாராளுமன்றக் குழுக் கூட்டங்களில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பங்கேற் கவோ கேள்விகளை எழுப்பவோ முடியாது என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார். (15ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு



(வவுனியா)
வவுனியாவில் இடம் பெற்ற விபத்தில் இளை ஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா ஏ9 வீதி அர சாங்க விதை உற்பத்தி பண் ணைக்கு அண்மித்த பகுதியில் நேற்று 15

## பளையில் விபத்து; மாணவன் மரணம்



(பளை)
பளையில் இடம்பெற்ற விபத்தில் 12 வயது மாணவன் சம்பவ இடத்திலேயே உயிரி ழந்துள்ளான்.

இச்சம்பவம் நேற்று மாலை பளை பொலிஸ் பிரி வுக்குட்பட்ட முல்லை 15

## உள்ளகக் கடன் மறுசீரமைப்பு எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தாது
### மத்திய வங்கி ஆளுநர் நந்தலால்



(கொழும்பு)
சர்வதேச கடன்மறுசீரமைப்பு செயன்முறையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தாத வகையி லேயே உள்ளகக்கடன்மறுசீரமைப்பு செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டிருப்ப தாக இலங்கை மத்திய வங்கியின் ஆளு நர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரி வித்துள்ளார்.

அரசாங்கத்தினால் கடந்த வாரம் முன் மொழியப்பட்டுள்ள உள்ளகக் கடன் மறு 15

## நீதிமன்ற கட்டமைப்பில் மாற்றங்கள் அவசியம்
### சபையில் அமைச்சர் அலி சப்ரி

(கொழும்பு)
நல்லாட்சி அரசாங்கம் நீதி மன்ற கட்டமைப்பில் ஏற்படுத் திய மாற்றங்களை தொடர்ந்து முன்னெடுத்து செல்கிறோம். நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை முடிவுக்கு கொண்டுவர புதிய பொறி முறை செயற்படுத்தப்படும்.

சிறந்த மாற்றத்துக்கு எதிர்க் கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் 15

## வரணியில் விபத்து; இளம் குடும்பஸ்தர் பலி
### திருமணம் நடைபெற்று சில நாட்களில் துயரம்



(யாழ்ப்பாணம்)
வரணியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் குடும்பஸ் தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் பொலிஸ் பிரி 15

## நிறுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் செப்ரெம்பரில் மீண்டும் ஆரம்பம்
### அமைச்சர் பந்துல குணவர்த்தன நம்பிக்கை

(கொழும்பு)
தற்போது இடைநிறுத்தப் பட்டுள்ள பெருமளவிலான வேலைத்திட்டங்கள் எதிர் வரும் செப்டெம்பர் மாதத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என நம்புவதாக அமைச்சர வைப் பேச்சாளர் பந்துல குண வர்தன தெரிவித்துள்ளார்.


அரசாங்க தகவல் திணைக் களத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாராந்த அமைச் சரவை முடிவுகளை அறிவிக் கும் ஊடகச் சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



தோற்றம் 11 - 11 - 1951

மறைவு 03 - 07 - 2023

# சபாபதி கிருஷ்ணபிள்ளை

**(இளைப்பாறிய முன்னாள் நீர்ப்பாசன உத்தியோகத்தர் - வவுனிக்குளம்)**

அம்பன், குடத்தனையைப் பிறப்பிடமாகவும் புகையிரத நிலைய வீதி, கொடிகாமத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி கிருஷ்ணபிள்ளை அவர்கள் கடந்த (03.07.2023) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சபாபதி - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி சரவணமுத்து - தெய்வானை தம்பதிகளின் மருமகனும் திருமதி கிருஷ்ணபிள்ளை கமலாதேவியின் அன்புக் கணவரும் சின்னத்தங்கம், அன்னக்கிளி, துரைராஜசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் தாமோதரம்பிள்ளை, காலஞ்சென்ற அன்னப்பிள்ளை மற்றும் சின்னம்மா, சிவயோகம், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம், கார்த்திகேசு ஆகியோரின் மைத்துனரும் கிருஷ்ணானந்தி (ஆனந்தி - பிரான்ஸ்), விமல்ராஜ் (விமல் - பிரான்ஸ்), காலஞ்சென்ற கமலதாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் விநாயகமூர்த்தி (பிரான்ஸ்), கலாரஜனி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பானுஜன் (பிரான்ஸ்), கமீஷ்கன் (பிரான்ஸ்), நிதுஷ்கன் (பிரான்ஸ்), சர்சிகா (பிரான்ஸ்), டினுஷ்கன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2023) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் கோகிலாமனை கட்டமுறிச்சான் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:- கி.விமல்ராஜ் (மகன்) பிரான்ஸ்*

புகையிரத நிலைய வீதி,
கொடிகாமம்.

தொடர்புகளுக்கு:- ஆனந்தி - 0033616258278, விமல் - 0033616646900, மனைவி - 077 018 5226

(16201)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 3 மணித்தியாலத்திற்கு 4 பேர் வரை விபத்துக்களால் உயிரிழப்பு!

## இது மிகவும் மோசமான நிலை என சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் ஒவ்வொரு மூன்று மணித்தியாலத்திற்கும் ஒருமுறை, விபத்துக்கள் காரணமாக, நான்கு பேர் வரையில் மரணிப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

தேசிய விபத்து தடுப்பு மற்றும் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் முகாமையாளர், விசேட வைத்தியர் சமித சிறிதுங்க இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அதாவது நாளொன்றுக்கு, 32 முதல் 35 பேர் வரையில், விபத்துக்களால் மரணிக்கின்ற நிலையில் வாகன விபத்துகள், தற்கொலைகள், நீரில் மூழ்குதல், வீழ்தல் மற்றும் மின்சாரத் தாக்கத்திற்கு இலக்காகுதல் உள்ளிட்ட காரணிகளால் குறித்த மரணங்கள் சம்பவிக்கின்றன.

மேலும் இது மிகவும் மோசமான நிலைமையாகும். எனவே, இதனைத் தடுப்பதற்கு பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுவதே அவசியமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# தாமரைக் கோபுரத்தை பார்க்க படையெடுத்த மக்கள்

(கொழும்பு)

கடந்த நீண்ட வார இறுதியில் மொத்தம் 18,728 பேர் தாமரைக் கோபுரத்தை பார்வையிட்டதாக அதன் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ஜூலை 1, 2 மற்றும் 3 ஆகிய திகதிகளில் நாடு முழுவதிலும் இருந்து வருகை தந்தவர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு இது கணக்கிடப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த காலப் பகுதிக்குள் தாமரை கோபுரத்தை பார்வையிட 367 வெளிநாட்டு பார்வையாளர்கள் வந்ததாக தாமரைக் கோபுர நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கோபுரம் பொதுமக்களுக்கு திறக்கப்பட்டது முதல் இன்று வரை மொத்தம் 953,918 பேர் கோபுரத்தை பார்வையிட்டுள்ளனர் மற்றும் அவர்களில் 18,320 வெளிநாட்டினர் அடங்குவர். (நி)

# சிறுபோக நெல் கொள்வனவிற்கு 1000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

நெல் கொள்வனவிற்காக 1,000 மில்லியன் ரூபாவை விடுவிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வழங்கப்பட்டுள்ள அனுமதிக்குஅமைய நெல் சந்தைப்படுத்தல் சபை ஊடாக நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளது. அதற்கமைய, சிறுபோக செய்கையில் அறுவடை செய்யப்பட்டுள்ள நெல், ஒரு கிலோகிராம் 90 முதல் 95 ரூபாவிற்கு கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நெல்லுக்கான உரிய விலை கிடைப்பதில்லை என நாட்டின் பல பகுதிகளில் உள்ள விவசாயிகள் தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)


# மெய்யடியார்களுக்கு வணக்கம்

அதீத சக்தியுடைய பெருந்தகை "அம்மா பகவான்" என்னை ஒரு சத்திரசிகிச்சையின்றி காப்பாற்றிய விபரத்தை தங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

எனது பெயர் முத்தையா தியாகராஜா, வயது 83, இருப்பிடம்-யாழ்ப்பாணம், இலங்கை. எனக்கு பல் ஒன்று கொதி. பல்வைத்தியர் Root Filling செய்த வேளை 1 1/2 அங்குல அளவிலான ஊசியை எனது தொண்டைக்குள் தவறவிட்டுவிட்டார்.

நான் பதற்றமடைந்தேன். டாக்டர் மறுநாள் காலை மலத்துடன் வெளியேறும் எனக் கூறிவிட்டு, அவ்வாறு வெளியேறாவிட்டால் எக்ஸ்றே எடுக்க வரும்படி கூறினார். மறுநாள் அது வெளிவரவில்லை. எனக்குப் பயமும் பதற்றமும் அதிகரித்தன.

எனது மகன், அப்பா பயப்படாதீங்கோ என்று கூறிவிட்டு பகவானின் மாலையை எனக்கு அணிந்து விட்டு பகவானின் மூலமந்திரத்தை உச்சரித்து பகவானிடம் வேண்டுங்கள் என்றார். அத்துடன் பகவான் அருளால் வழங்கிய சோமபானத்தையும் அருந்தினேன். அதன்படி பகவானிடம் மன்றாடி வேண்டினேன்.

பகவானின் முகத்தின் கீழ்ப்பகுதி எனக்குத் தென்பட்டு நாளை விழுந்து விடும் எனக் கூறி அருளினார். அவ்வாறு அடுத்தநாள் காலை எவ்வித இடையூறும் இன்றி அந்த ஊசி மலத்துடன் வெளியேறியது.

இதை நான் அடியவர்கட்கு தெரியப்படுத்துவது ஏனெனில் என்னை சத்திரசிகிச்சை ஏதும் இன்றி காப்பாற்றியவர் தங்களிற்கும் வேண்டிய வரம் தந்தருள்வார். நீங்கள் வழக்கமாக வணங்கும் குலதெய்வத்தை வணங்குவதுடன் பேரருள் மிக்க அம்மா பகவானையும் வணங்கி இடரிலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். இது எனது உளமார்ந்த இறை வேண்டுகோள். இந்த மகா அற்புதத்தினை செய்து அருளிய அம்மா பகவானுக்கு அனந்த கோடி கோடி நன்றிகள் உரித்தாகட்டும். நன்றி.

இது தான் எனது வயிற்றில் சென்று எந்தவித தீங்கின்றி அம்மா பகவானின் அருளால் வெளியில் வந்த பல்லு கிளீன் செய்யும் ஊசி





திரு.மு.தியாகராஜா,
ஓய்வு பெற்ற உப அதிபர்,
யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி,
பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம், இலங்கை.
077 831 3557

ஆஸ்பத்திரி வீதி,
மடம், சங்கானை.

(16194)


# கொத்து ப்ரைட் றைஸின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

எரிவாயு விலைக் குறைப்புக்கு ஏற்ப கொத்துரொட்டி மற்றும் ப்ரைட் றைசின் விலை குறைக்கப்படும் என அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். இவற்றின் அனுகூலங்களை மக்கள் உணரும் வகையில் இருக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் இந்த விலைக் குறைப்பு உடனடியாக அமுலாகும் வகையில் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)


# மணிவிழா அழைப்பிதழ்



பொருளியல் பேராசான்
உயர்திரு.**மாணிக்கம் லோகசிங்கம்**

இணைத்தலைமை
சிரேஷ்ட பேராசிரியர் பா.நிமலதாசன்
(பீடாதிபதி,முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்,யாழ்.பல்கலைக்கழகம்)
பேராசிரியர் சி.விஜயகுமார்
(பொருளியல் துறை. யாழ்.பல்கலைக்கழகம்)

காலம் – 08.07.2023 சனிக்கிழமை மாலை 02.30 மணி
இடம் –S.S மண்டபம், பருத்தித்துறை

நிகழ்வுகள்

02.30– ஆலயவழிபாடு (புலோலி தெற்கு ஸ்ரீமுதலி அம்பாள் ஆலயம்)
02.45– விழா நாயகனை மங்கல வாத்திய சகிதம் மண்டபத்திற்கு அழைத்து வரல்.
03.00– மங்கல விளக்கேற்றல்.
03.05– இறைவணக்கம்
03.10 – வரவேற்பு நடனம்
03.20– வரவேற்புரை
உயர்திரு பரா.ரதீஸ்
ஆசிரியர், யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
03.25– ஆசியுரைகள்
சிவஸ்ரீ அழகு ஜெகதீஸ்வர தேசிகர்
பரம்பரை உருத்து பிரதமகுரு, உடுப்பிட்டி வடக்கு.
நெற்குழு வைரவர் தேவஸ்தானம்.
அருட்பணி அன்ரனி பெர்னாண்டோ பெனற்
பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர்,பருத்தித்துறை பங்குத் தந்தை.
03.35 –தலைமையுரை
பேராசிரியர் சி. விஜயகுமார்
பொருளியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்.
03.45– வாழ்த்துப்பா
உயர்திரு ஆ.இரகுநாதன்.
சிரேஷ்ட முகாமையாளர், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.
04.00 – மணிவிழா மலர் வெளியீடு
வெளியீட்டுரை
உயர்திரு. இ. இராஜேஸ்கண்ணன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சமூகவியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்.
4.15 – வாழ்த்துரைகள்
பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா
துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்
சிரேஷ்ட பேராசிரியர் பா. நிமலதாசன்
பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்
உயர்திரு இ.வரதீஸ்வரன்
செயலாளர், விவசாய அமைச்சு, வடக்கு மாகாணம்.
உயர்திரு ஈ. தயாரூபன்
பிரதேச செயலாளர், பிரதேச செயலகம்,கரவெட்டி.
உயர்திரு. க.சத்தியபாலன்
வலயக்கல்விப் பணிப்பாளர்,வலயக்கல்வி அலுவலகம்,வடமராட்சி.
உயர்திரு ந.அனந்தராஜ்
முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்
உயர்திரு சோ.புஷ்பாகரன்
அதிபர்,யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.
உயர்திரு ச.சரவணபவான்
கணக்கியல் ஆசிரியர்
உயர்திரு சபா. குகதாசன்
இயக்குநர், குகன் கல்வி நிலையம், ஆவரங்கால்.
05.15–பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் ஊக்குவிப்பு நிதி வழங்கல்
05.30– விழா நாயகனை கௌரவித்தல்
05.45–விழா நாயகனின் ஏற்புரை
06.00–நன்றியுரை
உயர்திரு இ.அன்ரனி
தலைமையக முகாமையாளர்,
சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்,
பிரதேச செயலகம், கரவெட்டி.

(சி-6870)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மணிவிழா ஏற்பாட்டுக்குழு,
(பேராசானின் மாணவர்கள்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்காசிய கால்பந்து போட்டி
## 9 ஆவது தடவையாக இந்தியா சம்பியன்



பெங்களூரில் 14ஆவது தெற்காசிய கால்பந்து சம்பியன் ஷிப் போட்டி நடைபெற்றது. 8 அணிகள் பங்கேற்ற இந்த போட்டியில் லீக் மற்றும் அரை இறுதி சுற்றின் முடிவில் நடப்பு சம்பியன் இந்தியாவும், குவைத்தும் இறுதிப் போட்டிக்கு முன்னேறின.

சம்பியன் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. சம்பியன் பட்டத்தை தக்க வைக்கும் முயற்சியில் இந்திய வீரர்கள் ஆரம்பம் முதலே ஆக்ரோஷமாக ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அதேபோல் முதல் முறையாக கிண்ணம் வெல்லும் முனைப்புடன் குவைத் வீரர்களும் பதிலடி கொடுத்ததால் ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது.

இரு அணிகளும் சம பலத்துடன் மோதிய நிலையில், ஆட்ட நேர இறுதியில் தலா ஒரு கோல் அடித்து சமன் ஆனது. இதனால் கூடுதல் நேரம் ஒதுக்கப்பட்டது. இதில் சுனில் சேத்ரி கோல் அடிக்க இந்தியா 1-0 என முன்னிலையில் இருந்தது.

பின்னர் அடித்த கோலை குவைத் தவற விட, சந்தேஷ் ஜிங்கன் கோல் அடித்து 2-0 என இந்தியா முன்னிலையில் இருந்தது.

இருப்பினும், குவைத் தனது இரண்டாவது வாய்ப்பில் கோல் அடித்ததால் 2-1 ஆனது. இரண்டு பெனால்டிகளும் மாற்றப்பட்ட நிலையில், 3-2 என்ற கோல் கணக்கில் இந்தியா முன்னிலையில் இருந்தது.

இதையடுத்து, உதாந்தா சிங் தனது கோலை தவறவிட்டார். ஆனால் சுபாஷிஷ் போஸ் கோல் அடித்ததால் ஸ்கோர் பின்னர் 4-4 என்று கோல் கணக்கில் சமமானது. பின்னர், குர்பிரீத் சிங் சந்து கோல் அடித்ததை அடுத்து இந்தியாவுக்கு 5-4 என்ற கோல் கணக்கில் வெற்றிப் பெற்றது. இதன்மூலம், குவைத்தை வீழ்த்தி 9 ஆவது தெற்காசிய கால்பந்து சாம்பியன்ஷிப் பட்டத்தை இந்தியா வென்றது. (4)

# கால்பந்து வீரர் நெய்மருக்கு ரூ.28 கோடி அபராதம்



பிரேசில் கால்பந்து அணியின் நட்சத்திர வீரரான நெய்மருக்கு ரியோடி ஜெனீரோ மாகாணத்தின் தெற்கு கடற்கரை பகுதியை யொட்டி சொகுசு பங்களா உள்ளது.

செழுமையான மரங்களை கொண்ட அந்த பண்ணை வீட்டின் அருகில் செயற்கை ஏரி அமைத்தல் உட்பட பல்வேறு வசதிகளை உருவாக்கும் வகையில் உரிய அனுமதியின்றி கட்டுமான பணிகளை நெய்மர் மேற்கொண்டு வருவதாக எழுந்த புகாரை தொடர்ந்து அந்த பணிகளை தொடர கடந்த மாதம் தடை விதிக்கப்பட்டது.

அத்துடன் அந்த இடத்தை அதிகாரிகள் ஆய்வு செய்த தில் நெய்மர் சுற்றுப்புற சூழல் விதிமுறைகளை கடைபிடிக்காதுடன் முறையான அனுமதி பெறாமல் நதி நீரை திசைதிருப்புதல், மரங்களை வெட்டுதல், கற்களை அகற்றுதல் உள்ளிட்ட பல்வேறு விதி மீறல்களில் ஈடுபட்டு இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து ரியோடி ஜெனீரோ மாகாண அரசு நெய் மருக்கு ரூ.28.6 கோடியை அபராதமாக விதித்துள்ளது. (4)




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை அபிவிருத்தி சபையின் நிர்வாக சீர்கேட்டை நிறுத்துங்கள்

## பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிடம் சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

**நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றிவரும் பனை அபிவிருத்திச் சபையின் நிர்வாகச் சீர்கேட்டையும் முறையற்ற நியமனங்களையும் நிறுத்தி பனை அபிவிருத்தி சபையை வினைத்திறன் மிக்கதாகச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.**

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும்குறிப்பிடப்பட்டுள்ளதாவது

பனை அபிவிருத்திச் சபையானது 1978 ஆம் ஆண்டு தென்னை அபிவிருத்திச் சட்டத்தின் கீழ், யாழ்ப்பாணத்தை தலைமை அலுவலகமாகக் கொண்டு,பனையைநம்பிவாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் எனவும் பனை வளம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் எனவும் உருவாக்கப்பட்ட ஒரு சபையாகும்.

பனை அபிவிருத்தி சபையானது கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக, பருத்தித்துறை, திக்கம் பிரதேசத்தில் ஒரு வடிசாலையை நடத்தி வந்தது. மிகவும் இலாபகரமாக இயங்கி வந்த இந்த வடிசாலையினால் 3000 தொழிலாளர்கள் பயன் பெற்று வந்தார்கள்.

இந்த வடிசாலையானது பல வேறு சந்தர்ப்பங்களில் வடக்கில் பொறுப்பாக இருந்த அமைச்சர்களினால் சூறையாடப்பட்டன. இவ்வளவு கொள்ளைகளும் சூறையாடல்களும் இடம்பெற்ற பின்னரும் கூட அது தொடர்ந்தும் இலாபத்திலேயே இயங்கி வந்தது. கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக வடிசாலை மூடப்பட்டதன் காரணத்தினால் இந்த வடிசாலைக்கு கள்ளை விநியோகித்து வந்த தொழிலாளிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை காலமும் திக்கம் வடிசாலையை பனை அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் நடத்தி வந்தது. வடிசாலைக்கான உரிமம், பனம்சாராயத்தை உற்பத்தி செய்வதற்கான உரிமம், அவற்றைக் களஞ்சியப்படுத்துவதற்கும் விற்பதற்குமான உரிமம் அனைத்தும் பனை அபிவிருத்திச் சபையின் பெயரில் சமாசங்களிடமே இருந்தது.

ஆனால் இப்பொழுது இருக்கின்ற பனை அபிவிருத்திச் சபையின் தலைவரான சிங்களவர் ஒருவர், இந்த உரிமங்களை சிங்கள நபர் ஒருவருக்கு அளித்துள்ளதாக அறிய முடிகிறது. இதனால் பனைவளச் சங்கங்கள் சமாசங்கள், அதன் கூட்டுறவு நடவடிக்கைகள் அனைத்தும் முடக்கப்படுவதுடன் இந்த சகல வருமானங்களையும் ஒரு தனிநபருக்கு அளிக்க முற்பட்டமையானது ஒட்டு மொத்த பனை அபிவிருத்தி முயற்சியையும் சீர்குலைக்கும் செயற்பாடாகும்.

இந்த நடவடிக்கைகளின் காரணமாக, பனம் பொருள் உற்பத்தியும் அதன் ஏற்றுமதியும் மிக மோசமாகப் பாதிப்படைந்திருப்பதுடன், நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதற்கும் பங்களித்துள்ளது.

இந்த நிலையில், பனைவள அபிவிருத்திச் சபைக்கான அதனை திறம்பட நடத்துவதற்கான இலாபமீட்டும் ஒரு துறையாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மேற்கொள்ள வேண்டும்.

வடக்கு மாகாணத்தின் தலைமைச் செயலகத்தை வினைத்திறனாக இயங்க வைப்பதுடன் பல இலட்சங்களை வாடகையாக விழுங்கி ஏப்பம் விடும் கொழும்பு செயலகம் மூடப்படுவதுடன் அங்குள்ள அனைத்து கட்டமைப்புகளும் ஏற்கனவே உள்ள அரச ஆணைகளுக்கிணங்க, யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பட வேண்டும்.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக பனை வளத்தில் பரிச்சியமும் அத்துறையை அபிவிருத்தி செய்வதில் ஊக்கமும் அனுபவமும் கொண்ட சரியான நபர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

பனை வள கூட்டுறவு சபைகள் பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் பனைவளத்தை அடிப்படையாகக் கொண்டசங்கங்கள், சமாசங்கள் அதற்கென வழங்கி வரும் உதவிகள் ஒத்தாசைகள் அதிகரிக்கப்படவேண்டும்.

திக்கம் வடிசாலைக்குரித்தான அனைத்து உரிமங்களும் வழங்கப்பட்டு முன்னர் இதனை இயக்கி வந்த சமாசங்களுக்கே இவற்றைத் தொடர்ந்தும் இயக்குவதற்கான அனுமதி அளிக்கப்பட வேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதில் அதிகளவு அக்கறை கொண்டுள்ளதாகக் கூறிக்கொள்ளும் ஜனாதிபதியும் அமைச்சர்களும் இதில் கூடுதல் கவனம் செலுத்தி பொறுப்புடன் நடந்து கொள்ளுமாறு கோருகின்றோம்.

தனியாரை ஊக்குவித்து கூட்டுறவுத்துறையை இல்லாமல் செய்யும் நடவடிக்கைகளைக் கைவிட்டு, கூட்டுறவுத் துறையை ஊக்குவித்து அவற்றை ஏற்கனவே இருந்தது போல் இலாபமீட்டும் துறையாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் செயற்படுவதற்கு உதவுமாறு சகலரையும் கோருகிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (4-33)

# யாழில் 3 வீடுகளில் திருட்டு

## கைதான மூவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மூன்று வீடுகளை உடைத்து திருடிய குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவரும் அவர் திருடிய பொருட்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்களுமாக மூன்று இளைஞர்கள் யாழ்ப்பாண பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் மூன்று வீடுகள் உடைக்கப்பட்டு, பொருட்கள் திருடப்பட்டுள்ளன என உரிமையாளர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், திருட்டு குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவரை கடந்த திங்கட்கிழமை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

திருடப்பட்ட பொருட்களை வேறு இருவரிடம் ஒப்படைத்துள்ளதாக, விசாரணைகளில் சந்தேகநபர் அளித்த வாக்கு மூலத்தின் அடிப்படையில், இருவரை கைது செய்த பொலிஸார் அவர்களின் உடைமையில் இருந்து, வீடுகளில் திருடப்பட்ட மின் மோட்டர், கிரைண்டர் உள்ளிட்ட மின்சாதனங்கள் மீட்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட மூவரையும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தியதை அடுத்து மூவரையும் விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டது. (4-33)

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரதேசத்தில் வசிக்கும் கண்புரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண் பரிசோதனை முகாம் நாளை 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது.

அதேபோன்று பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவினைச் சேர்ந்த, கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச மருத்துவ முகாமும் அன்றைய தினமே 9 மணி தொடக்கம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் நடைபெறவுள்ளது.

குறித்த முகாமில் கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்கு அறியத்தரப்படும்.

கண்புரை சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்படும் நோயாளர்களை அந்தந்தப் பிரதேசத்திற்குரிய வைத்தியசாலைகளில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வருவதற்கும் சத்திரசிகிச்சை முடிவடைந்த பின்னர் மீண்டும் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து அவர்களது பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைக்கு கூட்டிச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் சுகாதார திணைக்களத்தினால் இலவசமாக மேற்கொள்ளப்படும்.

எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (4)

# திருமுறை மனனப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக்கழகம், சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையினையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையில் சமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டும் மனனம் செய்யும் ஆற்றலை மேம்படுத்தும் நோக்கிலும் திருமுறை மனனப் போட்டியை நடத்தவுள்ளது.

பாலர் வகுப்பு, தரம் 1, 2, 3 மாணவர்களுக்கு இப்போட்டி இடம் பெறவுள்ளது. இம்மாணவர்கள் "நத்தார்படை ஞானன் பசு", "பொன்னார் மேனியனே" ஆகிய இரு திருமுறைகளை மனனம் செய்து ஒப்புவித்தல் வேண்டும்.

இப்போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை பாலர் வகுப்பு, தரம்1 மாணவர்களுக்கு பி.ப 2 மணிக்கும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தரம் 2 மாணவர்களுக்கு காலை 9 மணிக்கும் தரம் 3 மாணவர்களுக்கு பி.ப 2 மணிக்கு யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் பி.ப நடைபெறவுள்ளது.

இவற்றுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 14 ஆம் திகதியாகும்.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.82(144) நாவலர் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பி.ப 3 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் பரீட்சைச் செயலர் சு.சிறிகாந்தன் தெரிவித்துள்ளார். (4)

# சாமுண்டாதேவி சமேத ஞானவைரவர் ஆலய அலங்காரத் திருவிழா

(சாவகச்சேரி)

சுழிபுரம் பெரியபுலோ அரசடி சாமுண்டாதேவி சமேத ஞான வைரவர் ஆலயத்தின் அலங்கார உற்சவத் திருவிழா நேற்று புதன்கிழமை ஆரம்பமாகியதுடன் தொடர்ந்து 12 தினங்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 17 ஆம் திகதி பொங்கல் விழாவும் 21 ஆம் திகதி 1008 சங்காபிஷேக நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

அலங்காரத் திருவிழாவானது உற்சவ குரு சிவஸ்ரீ ஞானசம்பந்தக் குருக்கள் மற்றும் ஆலய பிரதம குரு சிவஸ்ரீகுகன் குருக்கள் ஆகியோர் தலைமையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-33)

# மஹோற்சவ கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஆதி மயிலிட்டி காசிபூதராயர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு முன்னேற்றபாட்டு கலந்துரையாடல் எதிர்வரும் 9 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கடன் சுமையை குறைக்க

# மக்களின் சேமிப்பை அரசாங்கம் சூறையாடியுள்ளது- ஐ.ம.ச



(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியத்தினூடாக வழங்கப்படும் 9 சதவீத வட்டி 2026 ஆம் ஆண்டின் பின்னர் குறைக்கப்படமாட்டாது என அரசாங்கத்தால் உறுதியளிக்க முடியுமா? அரசாங்கம் அதன் கடன் சுமையை குறைப்பதற்காக மக்களின் பணத்தை சூறையாடியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றஞ் சுமத்தினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கம் அதன் கடன் சுமையை குறைப்பதற்காக மக்களின் சேமிப்பை சூறையாடியுள்ளது. வங்கி கட்டமைப்புக்களுக்கும் ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் எந்த பாதிப்பும் இல்லை எனக் கூறி மக்களை ஏமாற்றி 12 டிரில்லியன் ரூபாவை அரசாங்கம் சூறையாடியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் எந்த சந்தர்ப்பத்திலும் தேசிய கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளுமாறு கோரவில்லை. தற்போதுள்ள நிலைமையில் நாட்டை தொடர்ந்தும் நிர்வகித்துச் செல்ல முடியாது என்பதற்காகவே இவ்வாறானதொரு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கி, நிதி அமைச்சு மற்றும் அரசாங்கம் இதனை நன்கு அறிந்திருந்தும் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கு தற்போதுள்ள அமைச்சரவையே பொறுப்புக்கூற வேண்டும்.

இவர்களுடன் தொடர்ந்தும் ஆட்சியை முன்னெடுத்துச் சென்றால் மீண்டும் கடுமையான பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும். தேசிய கடன் மறுசீரமைப்பின் ஊடாக அரசாங்கம் தற்காலிக தீர்வையே முன்வைத்துள்ளது.

அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுமாறு ஐக்கிய மக்கள் சக்திக்கு அழைப்பு விடுத்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் பதவிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என உத்தரவாதமளிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியிடமிருந்து எந்த உத்தரவாதத்தையும் நாம் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில் எதிர்க்கட்சி தலைவர் பதவி அவர் வழங்கியதல்ல.

ஊழல், மோசடிகளை ஒழித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு நாம் நிச்சயம் ஒத்துழைப்பு வழங்குவோம். ஆனால் நாட்டை வங்குரோத்தடையச் செய்தவர்களை பாதுகாக்கும் வேலைத்திட்டங்களுக்கு ஒருபோதும் துணை போக மாட்டோம்.

இந்த அரசாங்கம் மக்கள் ஆணையற்றது. எனவே மக்கள் விரும்பும் ஆட்சியை அமைக்க அவர்களுக்கு அரசாங்கம் வாய்ப்பளிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# திருப்பதி ஏழுமலையான் கோயில் இலங்கையிலும் அமைக்கப்படும்

### செந்தில் தொண்டமானுக்கு உறுதியளித்த ஆந்திர முதலமைச்சர்

(டில்லி)

இலங்கையில் திருப்பதி ஏழுமலையான் கோயில் அமைக்கப்படும் என ஆந்திர மாநில முதலமைச்சர் ஜெகன்மோகன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுடன் நடைபெற்ற சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வயது மூப்பு காரணமாக திருப்பதிக்கு பயணம் செய்ய முடியாமல் இருக்கிறார்கள்.

அவர்களின் வசதிக்காக இலங்கையில் திருப்பதி ஏழுமலையான் கோவில் அமைக்குமாறும் ஆளுநர் செந்தில் தொண்டமான் கோரிக்கை விடுத்தார்.

இக்கோரிக்கைக்கு சாதகமான பதிலை ஆந்திர முதலமைச்சர் வழங்கியுள்ளார்.

இந்த சந்திப்பில் ஆந்திர முதலமைச்சரினால் திருப்பதி பெருமாள் சுவாமி சிலை செந்தில் தொண்டமானுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் இலங்கைக்கான இந்திய துணைத் தூதர் டாக்டர். வெங்கடேஷ் மற்றும் இலங்கையின் முக்கிய பிரதிநிதிகள் பங்கேற்றனர். (நி)



# ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து 12 லட்சம் கோடி ரூபாவை இழக்க நேரிடும்

### பொருளியல் துறை நிபுணர் எச்சரிக்கை

(கொழும்பு)

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டினால் எதிர்வரும் 2038 ஆம் ஆண்டுக்குள் ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து 12 இலட்சம் கோடி ரூபாவை இழக்க நேரிடும் என பொருளியல் துறைசார்ந்த சிரேஷ்ட நிபுணர் கலாநிதி நிஷான் டி மெல் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தொலைக்காட்சியொன்றுக்கு நேற்று முன்தினம் அளித்த செவ்வியின்போதே அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

கடன் மறுசீரமைப்பு காரணமாக ஓய்வூதிய நிதியிலிருந்து கணிசமான தொகையை இழக்க வேண்டிவரும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊழியர் சேமலாப நிதி, ஓய்வூதிய நிதி ஆகியவற்றில் கடந்த மே மாதம் 31 ஆம் திகதி நிலவரப்படி பிணை முறிகள் மூலம் வழங்கப்படும் கடன்களுக்கு சராசரியாக 13.5 வீத வட்டியை அரசாங்கம் பெற்று வந்தது. அத்னை 9.1 வீதமாகக் குறைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, அரச கடன்களுக்கு 13.5 வீத வட்டி வழங்கப்பட்டால் அந்த நிதியின் மதிப்பு 2038 ஆம் ஆண்டாகும்போது 25 ட்ரில்லியன் ரூபாவாக அதிகரிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் தற்போது அந்த நிதியின் மதிப்பு 3.456 ட்ரில்லியனாகும்.

அரசாங்கத்தின் கடன் மறுசீரமைப்பினால் 9.1 வீதமாக வட்டியை குறைப்பதன் மூலம் 12 ட்ரில்லியன் இழப்பை சந்திக்க நேரிடும் என கலாநிதி நிஷான் டி மெல் எச்சரித்துள்ளார். (நி)

### சீரற்ற காலநிலையால் மலையகம் பாதிப்பு

(ஹற்றன்)

மத்திய மலைநாட்டில் நிலவும் சீரற்ற வானிலையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

கடும் மழை மற்றும் மண்மேடு சரிவுகளால் பல வீதிகளில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஹற்றன் - கொழும்பு, ஹற்றன் - நுவரெலியா, மஸ்கெலியா - நல்லதண்ணி, தியகல - நோட்டன் உள்ளிட்ட பிரதான வீதிகளின் பல இடங்களில் மண்திட்டுக்கள் சரிந்து வீழ்ந்துள்ளன. (நி)


# இராசிபலன்

06.07.2023
ஆனி 21, வியாழக்கிழமை
திருதியை முற்பகல் 10.57 மணிவரை
திருவோணம் முற்பகல் 7.18 மணிவரை


அவிட்டம் பின்னிரவு 5.39 மணிவரை
சுபநேரம் -7.28-8.58 மணிவரை
இராகுகாலம்-1.28-2.58 மணிவரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்-புனர்பூசம்


வளவன்





உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், செய்தொழில் மேன்மையுண்டு.




நீண்டநாளைய நண்பர் ஒருவரின் நட்பு இடம்பெறலாம், தொழில் போட்டிகள் மாறும், தொழிலில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்




பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வாகன சுகமுண்டு, சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.





ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், தொட்ட காரியங்கள் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள்.




நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.




தொழில் சம்பந்தமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, உடல்நலன் சீராகும், போசன சுகமுண்டு.




பொதுவாழ்வில் புகழ் கூடும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.




மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், உறவினர்களின் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், பிரபல மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, விரயங்கள் மேலோங்கும் நாள், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.




மன நிறைவு கூடும் நாள், நீண்ட நாட்களாக தள்ளிப் போட்ட காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.




நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகநூல் தரிசனம் 159

# கடவுளுக்கு போடும் காசுக்கு விளம்பரம் தேவையா?

புத்தாண்டுக்கு முந்தைய நாள் இரவு, சம்பளம் வாங்கிய கையோடு வீட்டுக்குள் வந்தார் அப்பா. அவரது அன்பு மகள் ஜெனி, தூங்காமல் அவருக்காகக் காத்திருந்தாள். இருவரும் உணவு உண்ட பிறகு தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தனர்.

அந்நேரம், "அப்பா... அப்பா... இந்தப் புதுவருடத்துக்கு எனக்கு ஏதும் பரிசு இல்லையா?" என்று கேட்டாள் ஜெனி.

"ம்ம்...ம்... கண்டிப்பா உண்டுடா செல்லம், உனக்கு என்ன வேணும் சொல்லு?" என்று கேட்டார் அப்பா.

அப்பாவின் கைகளைப் பிடித்தவாறே, "எனக்குப் புது ஷூ வாங்கித் தாங்கப்பா, அதுவும் பாட்டா ஷூ வேணும்..." என்றாள் ஜெனி.

"நாளைக்கு வாங்கித் தர்றேன். இப்ப போய்த் தூங்கும்மா..." என்றார் அப்பா.

ஜெனி கேட்டபடியே, புத்தாண்டு அன்று காலை புது ஷூ வாங்கிக் கொடுத்தார் அப்பா. மிகுந்த மகிழ்ச்சியோடு, புத்தாண்டுப் பரிசைப் பெற்றுக் கொண்டாள் ஜெனி.

சிறிது நேரம் கழித்து, அந்தப் புது ஷூவை பரிசுப் பொருளாக வண்ணத் தாளை வைத்துக் கட்டிக் கொண்டிருந்தாள் ஜெனி. இதைக் கவனித்த அப்பா, "யாருக்கு இந்தப் பரிசைக் கொடுக்கப் போற ஜெனி?" என்று கேட்டார்.

"அது வந்துப்பா.... அடுத்த தெருவுல இருக்கிற ராணிக்குத் தரப் போறேன். பாவம்ப்பா அந்தப் பொண்ணு! அவகிட்ட ஒரே ஒரு ஷூதான் இருக்கு. அதுவும் கிழிஞ்சிருக்குப்பா... தன்னோட கிழிஞ்ச ஷூவை யாராவது பார்த்து விடுவாங்கன்னு, ராணி மறைச்சு மறைச்சு கஷ்டப்படுறதைப் பல நேரம் கவனிச்சிருக்கேன். அதனாலதான் புத்தாண்டுப் பரிசா புது ஷூ கொடுக்கலாம்னு முடிவு பண்ணியிருக்கேன்" என்று தயக்கத்தோடு சொன்னாள் ஜெனி.

"ரொம்ப நல்ல காரியம் ஜெனி. கண்டிப்பாக செய். ஆனா, என்கிட்டே பரிசு உனக்குன்னு ஏன் பொய் சொல்லிக் கேட்டே?" என்று அப்பா செல்லக் கோபத்துடன் கேட்டார்.

"அப்பா, ஒருவேளை நான் சொல்லியிருந்தா, நீங்க அடுத்த பொண்ணுக்குத்தானே என்று மலிவான விலையில் வாங்கி வரக்கூடும். அதனாலதான் எனக்கு வேணும்னு பொய் சொன்னேன்..." என்று தைரியமாகச் சொன்னாள் ஜெனி. என்ன சொல்வதென்று தெரியாமல் திகைத்துப் போனார் அப்பா!

புத்தாண்டுக்காகத் தயார் செய்திருந்த உணவுப் பண்டங்களை ஒரு கை பார்த்த பின், தன்னுடைய புத்தாண்டுப் பரிசை ராணியிடம் கொடுப்பதற்காகக் கிளம்பிச் சென்றாள் ஜெனி. ஆனால் போன சில நிமிடங்களிலேயே திரும்பி வந்தாள்.

இதைக் கவனித்த அப்பா, "என்ன ஜெனி, ராணி வீட்டுல இல்லையா? அதுக்குள்ளேயே வந்திட்டியே?" என்றார் அப்பா.

"நான் ராணிக்கிட்டே பரிசு கொடுக்கலைப்பா. அவுங்க வீட்டுக் கதவுகிட்ட வெச்சிட்டு ஓடி வந்துட்டேன்..." என்றாள் ஜெனி.

"ஏன், ராணி கூட சண்டையா? இல்லை கொடுத்தா வாங்க மாட்டாளா?" என்று அப்பா கேட்க,

"நான் ஒருவேளை அந்தப் பரிசைக் கொடுத்தா ராணி வாங்கிக் கொள்வாள். ஆனால் அதுக்குப் பிறகு என்னைப் பார்க்கும் போதெல்லாம் நன்றியுணர்ச்சியோடு பார்ப்பாள். இயல்பாகப் பழகமாட்டா, ஒரு உதவியாளனாகத்தான் என்னைப் பார்ப்பாள். கடவுள் உண்டியலில் போடும் காசுக்கு விளம்பரம் தேவையா?" என்றாள் பிஞ்சுக் குரலில் ஜெனி.

பிறருக்கு உதவ வேண்டுமென்று எண்ணும் தனது பதின்மூன்று வயது மகளைப் பார்த்து நெகிழ்ந்து போனார் அப்பா!

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் Valampurii@yahoo.com இலக்கத்திற்கு அல்லது எனும் E.Mail இற்கு அனுப்பி வையுங்கள்

# உக்ரைனில் ஏவுகணை தாக்குதல் சிறுவர்கள் உட்பட 43 பேர் காயம்



(கீவ்)

உக்ரைனின் குடியிருப்பு பகுதியிலுள்ள கட்டடமொன்றின் கார் தரிப்பிடத்தின் மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் 12 சிறுவர்கள் உள்ளிட்ட சுமார் 43 பேர் காயமடைந்துள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யாவின் ஏவுகணை தாக்குதலாக இருக்கும் என நம்பப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதலுக்கு இலக்கான பகுதியில் குடியிருப்பு கட்டடங்கள் மாத்திரமே அமைந்துள்ளதாக உக்ரைன் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

குடியிருப்பு கட்டடங்களை இலக்கு வைப்பது ரஷ்யாவின் மற்றுமொரு போர் குற்றம் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (நி)

# பல்கலைக்கழகச் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்ததில் ஐவர் உயிரிழப்பு

(டில்லி)

தனியார் பல்கலைக்கழகமொன்றின் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்ததில் கட்டுமானத் தொழிலாளர்கள் ஐவர் உயிரிழந்த சம்பவம் கோவையில் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களில் மூவர் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் எனவும் ஏனைய இருவரும் மேற்கு வங்காளம் மற்றும் கோவையைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று கல்லூரியில் ஏற்கனவே இருந்த சிறிய பக்கவாட்டுச் சுவரை ஒட்டி புதிதாக 10 அடி உயரம் கொண்ட பக்கவாட்டு சுவர் கட்டும் பணி நடைபெற்று வந்துள்ளதாகவும் இதன் போது திடீரென பழைய சுவர், தொழிலாளர்களின் மீது இடிந்து விழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்தில் படுகாயமடைந்த அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைக் கோவைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி)

# வகுப்பறைகளில் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்த தடை விதித்தது நெதர்லாந்து

(நெதர்லாந்து)

நெதர்லாந்தில் வகுப்பறைகளில் கையடக்கத் தொலைபேசி, ஸ்மார்ட் கைக்கடிகாரம், உள்ளிட்ட எண்மயக் கருவிகளின் பயன்பாட்டிற்கு தடைவிதிக்கப்படும் என அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

நெதர்லாந்தின் கல்வி அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களின் கவனச் சிதறல் காரணமாகவே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மருத்துவ காரணங்கள் மற்றும் விசேட தேவையுடையவர்களுக்கு மாத்திரம் கையடக்க தொலைபேசி உள்ளிட்ட எண்மயக் கருவிகளை பயன்படுத்த அனுமதிக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (நி)

# நெடுஞ்சாலையில் உருண்டு வந்த பாறை நசுங்கிய மூன்று கார்கள்

## இருவர் உயிரிழப்பு



(நாகலாந்து)

நிலச்சரிவு காரணமாக உருண்டு வந்த பாறையில் சிக்கி 3 கார்கள் நசுங்கியுள்ளதுடன் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம், நாகலாந்தின் பஹலா பஹார் என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

திமாபூர் மற்றும் கோஹிமா இடையே தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக ராட்சத பாறை உருண்டு வந்துள்ளது.

அந்த பாறையில் சிக்கிய ஒரு கார் முழுவதுமாக நசுங்கியுள்ளதுடன், இரண்டு கார்கள் பலத்த சேதமடைந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

குறித்த விபத்தினால், சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் பலத்த காயங்களுடன் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஒருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

DLB
அபிவிருத்தி லொத்தர்

www.dlb.lk

# இரண்டாம் வரம்

சீட்டிழுப்பு வாய்ப்புக்கள் இரண்டு
கோடிக்கணக்கில் பரிசுகளும் அதிகரித்துள்ளது.



දෙවෙනි වරම
Second Chance | இரண்டாம் வரம்

அபிவிருத்தி லொத்தர் சபை அறிமுகப்படுத்தும் DLB
இரண்டாம் வரம் மூலம் வெல்வதற்கு வாய்ப்புக்கள் இரண்டு.

பிரதான சீட்டிழுப்பின் மூலம் வழங்கப்படும் கோடீஸ்வர பரிசுகளுக்கு மேலதிகமாக "இரண்டாம் வரம்" சீட்டிழுப்பின் மூலம் தெரிவு செய்யப்படும் வெற்றி இலக்கங்களை, லொத்தரின் கீழ் பகுதியில் உள்ள இரண்டாம் வரத்திற்குரிய இலக்கங்களுடன் பொருத்தி, லொத்தரின் பின்பக்கம் உள்ள இரண்டாம் வரத்திற்குரிய பணப்பரிசுகளை வெல்லலாம்..

(C-20959)

ஒரு டிக்கெட்டின் விலை 40/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கிராசன் மன்னனுக்கு வணக்கம் செலுத்தும் நிகழ்வு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி - அக்கராயன் சந்தியில் அமைந்துள்ள அக்கிராசன் மன்னனின் திரு உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தும் நிகழ்வு நேற்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது.

இந்நிகழ்வில் பா்ரா ளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறீதரன் மற்றும் கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டதுடன், அக்கிராசன் மன்னனுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் வணக்க நிகழ்வுகளும் நடைபெற்றன. (4)

# காணிகளை விடுவிக்குமாறு கோரி கேப்பாப்பிலவு மக்கள் போராட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு -கேப்பாப்பிலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி காணி உரிமையாளர்களினால் நேற்று போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டமானது, கேப்பாப்பிலவு இராணுவ முகாமிலிருந்து பேரணியாக ஆரம்பமாகி, கேப்பாப்பிலவு இராணுவ முகாமின் பிரதான நுழைவாயிலை வந்தடைந்தது.



இதனைத் தொடர்ந்து காணி உரிமையாளர்களினால் தங்களின் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்றும் இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்றும் வலியுறுத்தி, பதாகைகளை ஏந்தியும் கோஷமெழுப்பியும் தங்களின் எதிர்ப்பினை வெளியிட்டனர். (4)



55 காலாட்படை பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் பிரசன்ன குணரத்னவின் வழிகாட்டுதலின் கீழ் 551 காலாட்படையணியினர் அல்வாய் தம்பியன்புலத்தில் ஆதரவற்ற குடும்பம் ஒன்றிற்கு புதிய வீட்டை நிர்மாணிப்பதற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தனர். வன்னி எய்ஸ்(கனடா) மூலம் வண. எம்.எஸ். சின்னையாவின் புதல்வர் ஜோய் அருள்ராஜாவின் நினைவாக வெளிநாட்டைச் சேர்ந்த செல்வி. தயிதா சின்னையாவினால் குறித்த திட்டத்திற்கு நிதியுதவி வழங்கப்பட்டது.



முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில் மனித எச்சங்கள் இனங்காணப்பட்ட குறித்த இடத்திற்கு சிரேஷ்ட சட்டத்தரணி இரத்தினவேல் நேற்று முன்தினம் விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

(படம்- ஜோசப்நயன்)

# கலாசார சீர்கேட்டுடன் இயங்கிய விடுதி சுற்றிவளைப்பு

## நால்வர் கைது

(நெளுக்குளம்)

வவுனியா ஏ9 வீதி மூன்று முறிப்பு பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது இரு பெண்கள் உட்பட நால்வரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த விருந்தினர் விடுதியில் கலாசார சீர்கேடு இடம்பெறுவதாக வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் குறித்த விடுதியில் திடீர் சுற்றிவளைப்பினை முன்னெடுத்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட நால்வரின் மருத்துவ அறிக்கைகள் பெறப்படவுள்ளமையுடன் மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட நால்வரையும் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (4-299)

# மன்னார் நகரில் மது விற்பனை நிலையம் அமைக்க கடும் எதிர்ப்பு

(மன்னார்)

மன்னார் நகரில் புதிதாக மதுபான விற்பனை நிலையம் திறக்கப்பட உள்ளமை குறித்தும் அதற்கான அனுமதியை உடன் நிறுத்தக் கோரியும் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் நேற்று மன்னார் பிரதேசச் செயலாளர் எம்.பிரதீப்பிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

மன்னார் புனித செபஸ்தியார் ஆலய வீதியில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு முன்பாக புதிதாக மது விற்பனை நிலையம் ஒன்று திறக்கப்பட உள்ளதாக அறிகிறோம்.

மன்னார் மாவட்டத்தில் பல்வேறு விதமான போதைப் பொருட்களால் சமூகத்தில் மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்கிறோம்.

குறிப்பாக இளையோர் மத்தியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன், பாடசாலை மாணவர்கள் பலரும் போதைக்கு அடிமையாகி உள்ளனர்.

எனவே மக்கள் செறிந்து வாழும் பிரதேசமும் மிக கிட்டிய தூரத்தில் மூன்று ஆலயங்கள் இருப்பதாலும் அவ்விடத்தில் மதுபான விற்பனை நிலையம் திறப்பதற்கு எந்த சந்தர்ப்பத்திலும் எவ்விதமான அரசியல் அழுத்தம் ஏற்பட்டாலும் அனுமதி வழங்கக் கூடாது என்பதை தங்களுக்கு சமூக நலனியல் நோக்கு நிலையிலிருந்து தெரிவித்துக் கொள்கிறோம் என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-285)

# இராணுவ தலைமை அலுவலகத்திற்கு முன் தீக்குளிக்க முயன்ற பெண்

## வவுனியாவில் சம்பவம்

(நெளுக்குளம்)


வவுனியா ஏ9 வீதியில் அமைந்துள்ள வன்னி இராணுவ தலைமை அலுவலகத்திற்கு முன்பாக இரண்டு பிள்ளைகளின் தாயார் மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலைக்கு முயன்ற நிலையில் வவுனியா பொலிஸாரினால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

நேற்று காலை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குருணாகல் வரக்காபொல பகுதியில் வசித்து வரும் 34 வயதுடைய குறித்த பெண்ணிற்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். இவர்களின் குடும்பத்தினுள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இரண்டு பிள்ளைகளையும் தந்தை அழைத்துச் சென்று இருவரும் சில மாதங்களாக பிரிந்து வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த இரண்டு பிள்ளைகளின் தாயாருக்கும் வன்னி இராணுவ தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் குடும்பஸ்தரான இராணுவ வீரருக்குமிடையே தொடர்பு ஏற்பட்டுள்ளது. எனினும் சில வாரங்களாக குறித்த இராணுவ வீரருடைய தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் விரக்தியடைந்த குறித்த குடும்பப் பெண் அவரை தேடி வன்னி இராணுவ தலைமை அலுவலகத்திற்கு சென்ற போதிலும் குறித்த இராணுவ வீரரை சந்திக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அப்பெண் தலைமை அலுவலகத்திற்கு முன்பாக தீக்குளிக்க முற்பட்ட சமயத்தில் வவுனியா பொலிஸாரினால் அவர் காப்பாற்றப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டார். (4-299)



வவுனியா ஊடக அமையத்திற்கும் அமெரிக்க நிறுவனத்திற்கும் (USAID) இடையில் வலுவூட்டல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

# பல்கலை அனுமதி பெறாத மாணவர்களுக்கான கருத்தரங்கு

(கிளிநொச்சி)

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த அகச்சுடர் அமைப்பு க.பொ.த உயர்தர பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதியைப் பெறாத மாணவர்களுக்காக கருத்தரங்கு ஒன்றை கிளிநொச்சியில் எதிர்வரும் 23.07.2023 அன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொள்வதற்கான விண்ணப்பப்பத்திரங்களை பெற innerflam eaustralia@gmail.com எனும் முகவரிக்கு மின்னஞ் சலை அனுப்பலாம் எனவும் 16 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பப்படும் விண்ணப்பங் களே ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் திட்ட இயக்குநர் த.நந்திவர்மன் தெரிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அரச வைத்தியசாலைகளில்
# பல மாதங்களாக செயலிழந்துள்ள சி.ரி.ஸ்கான் இயந்திரங்கள்
### அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

சி.ரி.ஸ்கான் உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான இயந்திரங்கள் அரச மருத்துவமனை கட்டமைப்பில் தொடர்ந்தும் செயலிழந்துள்ளதாக அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சில சி.ரி.ஸ்கான் இயந்திரங்கள் பல மாதங்களாக செயலிழந்துள்ளதாக சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்தார். இந்த இயந்திரங்கள் செயலிழந்துள்ளமையினால் பல்வேறு பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாமல் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜானக ஸ்ரீ சந்ரகுப் தவிடம் வினவிய போது, குறித்த இயந்திரங்களை பழுது பார்ப்பதற்காக நிதி அமைச்சிடம் இருந்து தற்போது நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அதற்கமைய, அவற்றை விரைவாக பழுது பார்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

# ஆடை ஏற்றுமதியில் பெரும் சரிவு
### மத்தியவங்கி தகவல்

(கொழும்பு)

இலங்கையின் ஆடை ஏற்றுமதி கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 363.3 மில்லியன் அமெரிக்க டொலர்களால் குறைந்துள்ளதாக மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் இலங்கையின் ஆடை ஏற்றுமதி 1,843.3 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இது கடந்த ஜனவரி மற்றும் மே மாதங்களுடன் ஒப்பிடுகையில் 16.5% வீழ்ச்சியாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

# இராகலை நெடுங்குடியிருப்பில் தீப்பரவல் 20 வீடுகள் தீக்கிரை

(இராகலை)

இராகலை கீழ் பிரிவிலுள்ள நெடுங்குடியிருப்பொன்றில் நேற்று முற்பகல் ஏற்பட்ட தீப்பரவலில் 20 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன.

இந்த தீப்பரவலினால் குறித்த வீடுகளிலுள்ள உடைமைகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த விபத்தினால் எந்தவித உயிர்ச் சேதமும் ஏற்படவில்லையென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், பல மணி நேர முயற்சியின் பின்னர் பிரதேச மக்களால் தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதேவேளை, தீயணைப்பு பணிகளின் போது, தவறி விழுந்து காயமடைந்த ஒருவர் சிகிச்சைகளுக்காக நுவரெலியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (நி)



இலங்கைக்கான மாலைதீவு உயர்ஸ்தானிகர் எச்.இ. அலிபைஸ் கடற்படைத் துணைத் தளபதி பிரியந்த பெரேராவை நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள கடற்படைத் தலைமையகத்தில் சந்தித்தார்.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 280 | 250 | 200 | 280 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 220 | 220 |
| பச்சைமிளகாய் | 700 | 800 | 600 | 700 |
| தக்காளி | 450 | 350 | 400 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 240 | 220 | 300 |
| கோவா | 320 | 300 | 300 | 300 |
| கரட் | 400 | 480 | 500 | 550 |
| பூசணி | 140 | 100 | 100 | 140 |
| புடோல் | 200 | 220 | 200 | 250 |
| வாழைக்காய் | 200 | 200 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 380 | 360 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 130 | 150 |
| பாகற்காய் | 600 | 400 | 400 | 800 |
| வெண்டக்காய் | 300 | 250 | 140 | 320 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 200 | 250 |
| பயற்றங்காய் | 450 | 400 | 300 | 250 |
| லீக்ஸ் | 420 | 350 | 300 | 350 |
| பீற்றூட் | 420 | 300 | 350 | 450 |
| கறிமிளகாய் | 350 | 350 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 450 | 600 |
| போஞ்சி | 550 | 450 | 400 | 520 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 200 | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 80 | 80 |
| தேசிக்காய் | 250 | 200 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 90 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 260 | 280 | 300 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 450 | 600 |
| முள்ளங்கி | 160 | 160 | --- | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 50 | 40 | 40 | 80 |
| ஈரப்பலா | 180 | 200 | --- | 200 |


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## 37வது பொதுப்பட்டமளிப்பு வைபவம் - 2023

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37வது பொதுப்பட்டமளிப்பு வைபவம் ஆடி மாதம் 19 ஆம், 20 ஆம் மற்றும் 21 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் 8 அமர்வுகளாக நடைபெறும்.**

இப்பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறுவோருக்கு கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் பட்டமளிப்பு அங்கிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆவணக்காப்பகத்தில் (Record Room) வழங்கப்படும். பட்டமளிப்பு வைபவத்திற்கான அங்கிகளைப் பெற்றுக் கொள்ளும் போது ஆள்அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியதான பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டையினைக் காண்பித்தல் வேண்டும்.

பட்டமளிப்பு விழாவின் போது புகைப்படம் எடுப்பதற்கான சகல ஒழுங்குகளும் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பட்டதாரிகள் தமக்குரிய பட்டமளிப்பு அமர்வு விபரங்களையும் ஏனைய பட்டமளிப்பு விழா தொடர்பான அறிவுறுத்தல்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக் கிளையின் அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம். மேற்குறித்த விபரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்திலும் பார்வையிடலாம். முகவரி: www.jfn.ac.lk

| திகதி | நேரம் | பட்டம் |
|---|---|---|
| 14.07.2023 (வெள்ளிக்கிழமை) | மு. ப. 10.00 - மதியம் 12.30<br>பி. ப. 02.00 -பி.ப. 04.00 | • பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்பு- 2020<br>• உயிர்முறைமைகள் தொழில்நுட்பமாணி சிறப்பு- 2020<br>• பொறியியல் தொழில்நுட்பமாணி சிறப்பு- 2020<br>• வணிகமாணி சிறப்பு- 2020<br>• வணிகமாணி பொது- 2020<br>• விவசாய விஞ்ஞானமாணி- 2020<br>• வியாபார நிர்வாகமாணி சிறப்பு- 2020<br>• வியாபார நிர்வாகமாணி பொது- 2020 |
| 15.07.2023 (சனிக்கிழமை) | மு. ப. 09.00 - மதியம் 12.30<br>பி. ப. 02.00 - பி.ப. 04.00 | • சட்டமாணி- 2021<br>• விஞ்ஞானமாணி சிறப்பு-2020<br>• பிரயோக விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி- 2020<br>• கணனி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி- 2020<br>• கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி- 2020<br>• விஞ்ஞானமாணி பொது- 2020<br>• சித்தவைத்திய சத்திரசிகிச்சைமாணி- 2020<br>• கலைமாணி பொது- 2019<br>• கலைமாணி பொது- 2020<br>• கலைமாணி பொது (Opted)- 2019<br>• கலைமாணி பொது (Opted)- 2020<br>• சங்கீதத்தில் சிறப்பு நுண்கலைமாணி- 2019<br>• நடனத்தில் சிறப்பு நுண்கலைமாணி- 2019<br>• சித்திரமும் வழவமைப்பிலும் சிறப்பு நுண்கலைமாணி- 2019 |
| 16.07.2023 (ஞாயிற்றுக்கிழமை) | மு. ப. 09.00 - மதியம் 12.30<br>பி. ப. 02.00 - பி.ப. 04.00 | • கலாநிதி<br>• முதுமெய்யியல்மாணி<br>• தூய சக்தித் தொழில்நுட்பங்களில் முதுமாணி- 2021<br>• முது வியாபார நிர்வாகமாணி- 2021<br>• கல்வியியலில் பட்டப்பின் தகைமைச்சான்றிதழ்- 2021<br>• கல்வியியலில் பட்டப்பின் தகைமைச்சான்றிதழ்- 2023 (பகுதி நேரம்.)<br>• முகாமைத்துவத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்- 2019<br>• வைத்தியமாணி சத்திரசிகிச்சைமாணி<br>• வைத்திய விஞ்ஞானமாணி- 2022<br>• தாதியியலில் சிறப்பு விஞ்ஞானமாணி- 2020<br>• மருந்தகவியல் சிறப்புமாணி- 2020<br>• மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி- 2020 |
| 17.07.20203 (திங்கட்கிழமை) | மு. ப. 09.00 - மதியம் 12.30<br>பி. ப. 02.00 - பி.ப. 04.00 | **திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்**<br>• வணிகமாணி சிறப்பு- 2019<br>• வணிகமாணி பொது- 2019<br>• வியாபார முகாமைத்துவமாணி- 2020 |

**குறிப்பு:**

1) பட்டதாரி மாணவர்கள் கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக் கிளையினால் வழங்கப்படும் தொழில் பெறுஇயலுமைக்கான கேள்விக் கொத்தினைப் பெற்று, முறையாகப் பூரணப்படுத்தி பட்டமளிப்பு அங்கிகளைப் பெறுவதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

2) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் வவுனியா வளாகத்தின் பட்டதாரிகள் தங்களது பட்ட அங்கிகளை 17.07.2023 (திங்கட்கிழமை) மற்றும் 18.07.2023 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் வவுனியாப் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி இல:024-222-3317) மின்னஞ்சல் முகவரி: dr.exams@vau.ac.lk

**பதிவாளர்.**

(சி-6871)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1



# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் ௨௨௨



"பெரியவனை மாயவனைப் பேருலகமெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே!
கண்ணிமைத்துக் காண்பார் தம் கண்ணென்ன கண்ணே!
மடந் தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர் பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்தாரண முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே!
நாராயணா வென்னா நாவென்ன நாவே!

இதைக் கேட்ட வல்லவரையன் "கஞ்சனார் மிக்க வஞ்சனாராயிருக்கலாம். ஆனால் எனக்கு நேற்றுப் பேருதவி செய்தார்!" என்றான்.

"அது என்ன? கம்ஸன் உமக்கு என்ன உதவி செய்திருக்க முடியும்?" என்று இளைய பிராட்டி கேட்டாள்.

"நான் இந்த நகரத்துக்குள் புகுவதற்குக் கம்ஸன் தான் உதவி செய்தான்!" என்றான் வந்தியத்தேவன். பிறகு, அந்த உதவியின் வரலாற்றையும் கூறினான்.

பழையாறைக்குத் தான் வந்து சேர்வதற்குள்ளாகவே பழுவேட்டரையரின் ஆட்கள் வந்திருப்பார்கள் என்று வந்தியத்தேவன் ஊகித்திருந்தான். நகரத்தின் நுழைவாசல்கள் தோறும் அவர்கள் காத்திருப்பார்கள்.

சந்தேகம் ஏதேனும் தோன்றினால் பிடித்துக் கொண்டு போய் விடுவார்கள். அவர்களிடம் சிக்காமல் பழையாறை நகருக்குள் பிர வேசிப்பது எப்படி? இந்தக் கவலையுடன் அந்த மாநகரின் பிரதான வாசலுக்குச் சற்றுத் தூரத்தில் அரிசிலாற்றங்கரையில் வந்தியத்தேவன் நின்றிருந்த போது நாடக கோஷ்டி ஒன்று வந்தது. கண்ணன், பலதேவன், கம்ஸன் முதலிய வேஷக்காரர்கள் வந் தார்கள். அவர்களில் கம்ஸன் மட்டும் மரத்தினாலான முக த்தைத் தரித்திருந்தான்.

வந்தியத்தேவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. நாடக கோஷ்டியுடன் பேச்சுக் கொடுத்தான். கம்ஸன் வேஷம் போட்டவனுக்கு ஆட்டத் திறமை அவ்வளவு போதாது என்றான்.

கம்ஸ வேஷக்காரன் இவனுடன் சண்டைக்கு வந்தான். வந்த சண்டையை இலகுவில் வல்லவரையன் விடுவானா? "உன்னைவிட நான் நன்றாக ஆடுவேன். பார்க்கிறாயா?" என்று சொல்லி முகமூடியைப் பலவந்தமாகப் பிடுங்கி வைத்துக் கொண்டு ஆடினான். அச்சமயம் அவனுடைய ஆரவாரத் தடபுடலைப் பார்த்தவர்கள் அவனை மெச்சினார்கள். அவன் ஆடியது தான் அதிக பொருத்தமாயிருந்தது என்றும் சொன்னார்கள். கம்ஸ வேஷக்காரன் கோபித்துக் கொண்டு போய்விட்டான். "அவன் போனால் போகட்டும் நானே உங்களுடன் நகரத்துக்குள் வந்து ஆடுகிறேன்" என்று வந்தியத்தேவன் ஒப்புக் கொண்டான். நாடக கோஷ்டியார் மகிழ்ச்சியுடன் அவனைத் தங்களுடன் சேர்த்துக் கொண்டு சென்றார்கள்.

பழையாறை வீதிகளில் ஆட்டம் பாட்டமெல்லாம் முடிந்த பிறகு வந்தியத்தேவன் ஆதித்த கரிகாலர் சொல்லி அனுப்பியபடி வட மேற்றளி ஆலயத்துக்குச் சென்று ஈசான பட்டரைச் சந்தித்துப் பேசினான். அவர் அவனைக் கோயிலைச் சுற்றியிருந்த சமணர் முழையில் இருக்கச் செய்து, இளவரசி குந்தவைப் பிராட்டியிடம் முன்னால் தெரிவித்து விட்டு ஓடை வழியாக அழைத்து வந்தார்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## வழுக்கைக்கு மருந்து



அரசனுக்கு வயதாகிக் கொண்டிருந்தது. தலைமுடி கொட்டி வழுக்கை அதிகமாகிக் கொண்டிருந்தது. அரசனுக்கு தன் கம்பீரம் குறைந்து விடும் என்ற கவலை அதிகமாகிப் போய் ஒருநாள் அரசவைத் தலைமை மருத்துவனிடம் நிவாரணம் கேட்டான்.

தலைமை மருத்துவன் "மன்னா! இதற்கு மருந்தே கிடையாது" என்று உண்மையைச் சொன்னான். அரசனுக்கு அந்த பதில் பிடிக்கவில்லை. கோபமடைந்தான். ஆத்திரம் தலைக்கேறி தலைமை மருத்துவனை சிறையில் அடைக்குமாறு உத்தரவிட்டான்.

ஊரில் இருக்கும் அனைத்து சிறந்த மருத்துவர்களையும் வரவழைத்தான். ஒரே வாரத்தில் தன் பிரச்சினைகுத் தீர்வு கண்டுபிடிக்குமாறு பணித்தான்.

மருத்துவர்கள் அனைவரும் கூடி விவாதித்தனர். அரசனிடமிருந்து எப்படித் தப்பிப்பது என்றுதான் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒரு துடிப்பான இளைஞன் இருந்தான். பிரச்சினைக்குத் தன்னிடம் தீர்வு இருப்பதாகக் கூறினான். அனுபவம் முதிர்ந்த வயதான மருத்துவர்கள் கூட்டத்தில் இருந்தனர். அவனைப் பார்த்து சிரித்தனர். "வழுக்கைக்குத் தீர்வா? போய் வேறு வேலை இருந்தால் கவனியப்பா" என்று கூறினர்.

நாள் செல்லச் செல்ல அவர்களுக்கு அரசனிடமிருந்து தப்பிக்கும் வழி தெரியவில்லை.

அரசனை இந்த நிலையில் சந்தித்தால் கண்டிப்பாகத் தலைமை மருத்துவனுக்கு நேர்ந்த கதிதான் தமக்கும் நடக்கும் என்று எல்லோருக்கும் புரிந்தது. கதிகலங்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது இளைய மருத்துவன் திரும்பவும் "என்னை நம்பி [illegible] நம் எல்லோருக்கும் விடிவு நிச்சயம்" என்று கூறினான்.

வேறு வழியில்லாமல் அனைவரும் அவன் வழியில் செல்ல ஒத்துக் கொண்டார்கள். அவனோ, மருந்தை நேரடியாக அரசனிடம்தான் தருவேன், என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டான்.

அடுத்த நாள் சபை கூடியது. மருத்துவர்கள் இளைய மருத்துவனைக் கூட்டிக் கொண்டு அரசவைக்கு வந்தார்கள்.

அவன் அரசனிடம் ஒரு குடுவையைக் கொடுத்தான். "மன்னா இதில் இருக்கும் மருந்தை தினமும் சிரசில் தேய்த்துக் கொண்டு வந்தால், ஒரே மாதத்தில் முடி கொட்டுவது நின்று போகும். இரண்டே மாதத்தில் முடியில்லாத இடத்திலெல்லாம் முடி வளர ஆரம்பிக்கும், ஆறே மாதத்தில் கருகருவென தலையெங்கும் தலைமுடி அழகாக வளர்ந்திருக்கும்" என்றான்.

மன்னனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. "இப்போதே அந்தப்புரத்திற்குப் போய் தலையில் மருந்தைத் தடவிக் கொள்கிறேன்" என்று கிளம்பினான்.

அப்போது மருத்துவன் "மன்னா. இந்த மருந்து வேலை செய்ய வேண்டுமென்றால், அதைத் தலையில் தடவிக் கொள்ளும் போது மட்டும் நீங்கள் குரங்கை நினைக்கக் கூடாது!" என்றான்.

முட்டாள் மன்னன் சரியென்று சொன்னான். மந்திரியிடம் மருத்துவர்களுக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து சிறப்பாக மரியாதை செய்து அனுப்பி வைக்கச் சொல்லிவிட்டு அந்தப்புரத்திற்கு வேகமாகச் சென்று விட்டான். மருத்துவர்களும் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஊரை விட்டே ஓடி விட்டார்கள்.

அந்தப் புரத்திற்குச் சென்ற அரசன், அங்கு குடுவையைக் கையில் எடுத்து அதிலிருந்த மருந்தைத் தலையில் தேய்க்கப் போனான். அப்போது அவனுக்கு மருத்துவன் சொல்லிய பக்குவம் கவனத்திற்கு வந்தது.

"குரங்கை நினைக்கக் கூடாது" என்று நினைத்தவுடன் குரங்கைப் பற்றி நினைக்க ஆரம்பித்து விட்டான்.

என்ன முயற்சித்தும் அவன் நினைவிலிருந்து குரங்கை அகற்ற இயலவில்லை.

மன்னனுக்கு மருத்துவனின் தந்திரம் புரியவில்லை. சற்று நேரம் கழித்து முயற்சிப்போம் என்று வேறு வேலையில் ஈடுபட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது.
அதை யாராலும் மூடிமறைக்க முடியாது.
– மில்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அடையாளப்படுத்துவதில் ஏன் இந்த அசமந்தம்

அடையாளப்படுத்துவதென்பது மிகவும் முக்கியமானது.

இருந்தும் இதுவிடயத்தில் நம்மவர்கள் அசமந்தப் போக்குடையவர்களாக இருப்பது தான் ஏன் என்று புரியவில்லை.

அதாவது அரச அமைப்புகள், திணைக்களங்கள் மற்றும் உப நிலையங்கள், பாடசாலைகள் தமது இருப்பிடத்தை அதன் அமைவிடத்தை தெளிவாக அடையாளப்படுத்த வேண்டும்.

இருந்தும் இதுவிடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏனோதானோ என்றவாறு செயற்படுகின்றனர்.

உதாரணத்துக்கு நேற்றைய தினம் யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் அமைந்துள்ள உப தபாலகத்தை தேடிப்பிடிப்பதற்கு ஓர் அன்பர் கல்வியங்காட்டுச் சந்தைப் பகுதியைச் சுற்றி அலைந்தார்.

அதற்குக் காரணம் உபதபாலகம் அமைந்துள்ள இடம் உரியவாறு அடையாளப்படுத்தாமையாகும்.

தவிர, கல்வியங்காடு உப தபாலகத்தில் தொங்குகின்ற பெயர்ப்பலகையானது இலங்கையில் எப்போது உபதபாலகம் ஆரம்பிக்கப்பட்டதோ அப்போது தொங்கவிடப்பட்ட பெயர்ப் பலகைதான் இப்போதும் அங்கு இருக்கிறதோ என்று எண்ணத் தோன்றும்.

அந்தளவுக்கு கல்வியங்காடு உப தபாலகம் தனது இருப்பிடத்தை வெளிப்படுத்துவதில் உரிய வழிமுறைகளைப் பின்பற்றவில்லை.

இது உதாரணத்துக்கான சுட்டிக்காட்டுதலேயன்றி வேறில்லை.

இதேபோன்று கால்நடை வைத்தியசாலைகள், குச்சொழுங்கைகளில் இயங்குகின்ற விவசாய அமைப்புகள், பிரதேச சபைகளின் உப அலுவலகங்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அலுவலகங்கள், கிராம உத்தியோகத்தர்களின் பணிமனைகள் என்பனவற்றிலும் ஆங்காங்கே உரிய அடையாளப்படுத்தல்கள் இல்லாத குறைபாடுகள் உள்ளன.

இதுதவிர யாழ்ப்பாண மாநகரத்தில் வீடுகளுக்குரிய இலக்கங்களை வீட்டு நுழைவாயிலில் பொறிக்காமையால், வீடுகளைத் தேடிக் கண்டறிவதென்பது முடியாத காரியமாக உள்ளது.

அதிலும் சிலர் தமது வீடுகளுக்கு பழைய இலக்கங்களையும் இன்னும் சிலர் எண் சோதிட அடிப்படையில் தமக்கு அதிர்ஷ்டமான இலக்கங்களையும் பொறித்து தங்களையும் மற்றவர்களையும் ஏமாற்றுகின்றனர்.

உண்மையில் உலகம் முழுமையிலும் வாழ்விடங்களை அடையாளப்படுத்துவதற்கான முறைமையாக வீதிகளின் பெயர்களும் வீட்டுக்குரிய இலக்கங்களுமே உள்ளன.

ஆம், தலைநகர் கொழும்பில் ஒரு வீட்டைக் கண்டறிவதென்பது மிகச் சுலபமாக இருக்கிறது.

இதற்கு அங்குள்ள வீதியின் பெயரும் வீட்டு இலக்கத்தின் அடையாளப்படுத்தலுமே மூலகாரணமாக இருக்கிறது.

ஆனால் நம் யாழ்ப்பாணத்தில் வீட்டு இலக்கங்களை வெளிப்படுத்துவதில் – நுழைவாயிலில் பொறித்து விடுவதில் நம்மவர்களிடம் உள்ள அசமந்தப் போக்கு பலரையும் அலைய வைக்கிறது.

ஆகையால் அடையாளப்படுத்தல் என்ற விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அதுசார்ந்த அமைப்புகள் அதீத கவனம் செலுத்தி அடையாளப்படுத்தல்களை வலுக்கட்டாயமாக அமுலுக்குக் கொண்டு வரவேண்டும்.

# அனைத்து பிரச்சினைகளுக்கும் போதைப் பாவனையே மூல காரணம்

## பாராளுமன்றில் மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

நாட்டின் அனைத்து பிரச்சினைகளுக்கும் போதைப் பொருள் பாவனை பிரதான காரணியாக உள்ளது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற "நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள்" தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

நீதிமன்றங்களில் சுமார் 11 இலட்சத்துக்கும் அதிகமான வழக்குகள் நிலுவையில் உள்ளதாக குறிப்பிடப்படுகிறது. வழக்குகள் அதிகம், வழக்குகள் குறைக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்படுகிறது.

வழக்குகளின் எண்ணிக்கை தொடர்பில் அவதானம் செலுத்தாமல் வழக்குகள் தோற்றம் பெறுவதற்கான காரணம் தொடர்பில் ஆராய வேண்டும்.

பொருளாதார பாதிப்புக்கு பின்னர் சமூக கட்டமைப்பில் சமூக விரோத செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. அனைத்து மதங்களின் ஒத்துழைப்புடன் சிறந்த மாற்றத்துக்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

போதைப் பொருள் பாவனை மற்றும் வியாபாரம் சமூக விரோத செயற்பாடுகளுக்கும், குற்றங்களுக்கும் பிரதான காரணியாக உள்ளது. இதன் காரணமாகவே வழக்குகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பிரச்சினைகளின் பின்னணியாக போதைப் பொருள் பாவனை காணப்படுகிறது.

நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் இருப்பதற்கு ஏழ்மையும் ஒரு காரணியாக உள்ளது. ஆகவே, நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளை நிறைவுக்கு கொண்டு வருவதற்கு அவதானம் செலுத்துவதுடன், வழக்குகள் தோற்றம் பெறுவதற்கான காரணிகளை அடையாளம் கண்டு அவற்றுக்கு தீர்வு காண வேண்டும்.

வழக்குகள் தொடர்ந்து இழுபறி நிலையில் இருப்பதை வழக்கறிஞர்கள் விரும்புவார்கள். வழக்குகள் இழுபறி நிலையில் இருக்கும்போது வழக்கறிஞர்கள் மாத்திரமே பயனடைவார்கள். ஆகவே, வழக்குகளை வெகுவிரைவில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிமன்ற கட்டமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றார். (ம-7)

# வயிற்றில் மூன்று சிசுக்களுடன் உயிரிழந்த கர்ப்பிணித் தாய்

## 8 வருடங்களின் பின் குழந்தைக்காக காத்திருந்த போது பரிதாபம்

(கொழும்பு)

கர்ப்பிணித் தாய் ஒருவர் மூன்று குழந்தைகளைப் பெற்றெடுக்கத் தயாராக இருந்த நிலையில் ராகம வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு பல்கலைக் கழகத்தின் பட்டதாரியான 36 வயதான லவந்தி சதுரி ஜயசூரிய என்ற கர்ப்பிணித் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

திருமணமாகி எட்டு வருடங்கள் கழித்து குழந்தை இல்லாததால் குழந்தை பெற்றுக்கொள்ளும் ஆசையில் இருந்ததாக அவரது கணவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, குழந்தை கருத்தரித்ததால், நாரஹேன்பிட்டி பிரதேசத்தில் உள்ள தனியார் வைத்தியசாலை யொன்றின் விசேட வைத்தியரின் ஆலோசனைக்கு அமைய கடந்த 28 ஆம் திகதி ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அவர் 23 வாரங்கள் கருவுற்றிருந்தார்.

கடந்த 29 ஆம் திகதி இரவு அவர் சிரமப்பட்டார்.

30 ஆம் திகதி காலை தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

இரண்டாவது நாள் மதியம் மனைவி மற்றும் மூன்று குழந்தைகள் இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வைத்தியசாலையின் அலட்சியத்தால் இந்த துயர சம்பவம் நடந்துள்ளது என தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் ராகம போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ரணவீர கருத்து தெரிவிக்கையில்,

கருவில் இருந்த குழந்தைகளும் தாயும் உயிரிழந்தமைக்கு வைத்தியசாலை பொறுப்பல்ல.

உயிரிழந்த பெண்ணுக்கு பல வருடங்களாக குழந்தை இல்லாமல் இருந்த நிலையில், குழாய் மூலம் பிரசவத்திற்காக கருப்பையில் கருமுட்டை பொருத்தி தனியார் வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சிகிச்சைகள் அரச வைத்தியசாலைகளில் செய்யப்படுவதில்லை

இவற்றை தனியார் வைத்தியசாலைகள் பல இலட்சம் ரூபாய் செலவழித்து செய்கின்றன.

இதன்போது பல கரு முட்டைகளை பொருத்துகிறார்கள். குறைந்த பட்சம் ஒரு முட்டையாவது நன்றாகப் போகும் என்ற நம்பிக்கையில் இவ்வாறு செய்யப்படுகிறது.

எனினும் இந்த தாய்க்கு மூன்று முட்டைகளும் கருவுற்றிருந்தது. எவ்வாறாயினும் சுமார் இருபது வாரங்களில் அவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டு ராகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த தாயையும் அவரது குழந்தைகளையும் காப்பாற்ற வைத்தியசாலையின் ஊழியர்கள் கடுமையாக உழைத்தனர்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# கம்பஹாவில் இளம் யுவதி வெட்டிப் படுகொலை

கம்பஹா மாவட்டம், அத்தனகல்லை பிரதேசத்தில் இளம் யுவதி ஒருவர் கொடூரமாக வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

21 வயதுடைய எஸ்.ஜே.ரோஹிணி என்ற பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார். குறித்த யுவதி வீட்டில் தந்தை, தாய் ஆகியோருடன் நின்ற வேளை மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கிய இருவர் வீட்டுக்குள் புகுந்து கூரிய ஆயுதத்தால் யுவதியைச் சரமாரியாக வெட்டி விட்டுத் தப்பியோடியுள்ளனர்.

சந்தேகநபர்கள் முகத்தை மூடிய தலைக்கவசத்தை அணிந்தவாறு வந்து இந்த வெறியாட்டத்தைப் புரிந்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார், யுவதியின் சடலத்தை மீட்டு வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளனர். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** புதுக்குடியிருப்பு மேற்கு (வேணாவில்) **வவுனியா பிரதேசத்தில்** ஆசிக்குளம், மறக்கறம்பளை-கணேசபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

10

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



**விஜய வம்சம்**

**வலகம்பாகு (கி.மு 89-76)**

வலகம்பாகு அல்லது வட்டகாமினி அபயன் என்பவன் இலங்கையின் அநுராதபுர அரசனாக கி.மு 104இல் இருந்தவன். அரசனாகி ஐந்து மாதங்களுக்குப் பின், தென்னிந்தியாவில் இருந்து வந்த ஒரு கிளர்ச்சிப் படை இவனை வீழ்த்தி ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால் பதினான்கு ஆண்டுகள் கழித்து படையெடுப்பாளர்களை தோற்கடித்து மீண்டும் (கி.மு 89ல்) அரியணை ஏறினான். தமிழ்க் குறுநில மன்னனால் கவர்ந்து செல்லப்பட்ட சோமா தேவியை மீளப்பெற்றுத் தனது ராணியாக்கிக் கொண்டான்.

இவன் கல்லாடநாகனின் மகனான மகசூழிகா என்பவனை தனது மகனாக ஏற்றுக் கொண்டான். மகசுழிகாவின் தாயான அனுலா தேவியை ராணியாக ஏற்றுக் கொண்டான். இவனே அபயகிரிவிகாரையைக் கட்டுவித்தான். இதன் உயரம் 70 மீற்றர்கள் ஆகும். இவ்வபய கிரிவிகாரை பின்னாளில் நாட்டின் பிரதான மூன்று பௌத்த அமைப்புக்களுள் ஒன்றாக விளங்கியது. இதை விடவும் மேலும் சில தாது கோபங்களையும் இவன் கட்டியுள்ளான்.

**மகசுழிமகாதீசன்(கி.மு. 76- 62)**

மகசுழிமகா தீசன் என்பவன் கி.மு. 76 தொடக்கம் கி.மு. 62 வரை இலங்கையின் அநுராதபுரத்தை ஆட்சி செய்த அரசன் ஆவான். இவன் தனது வளர்ப்புத் தந்தையான வலகம்பாகுவை, தனது மைத்துனனான சோரநாகன் மூலம் வெற்றி கொண்டு ஆட்சியைக் கைப்பற்றினான்.

**சோரநாகன் (கி.மு. 62 - 50)**

சோரநாகன் என்பவன் கி.மு. 62 தொடக்கம் கி.மு. 50 வரை இலங்கையின் அநுராதபுர இராசதானியை ஆண்ட அரசன் ஆவான். இவன் இவனுடைய மைத்துனனான மகசுழிமகாதீசனை தோற்கடித்து ஆட்சி பீடம் ஏறினான். இவனுடைய மருமகன் குடதீசன் இவனின் பின்பு ஆட்சிப்பீடம் ஏறினான்.

இவன் வலகம்பா மன்னனின் மகனாவான். மகசுழிமகாதீசன் காலத்தில் இவன் அரசனுக்கு எதிராகக் கலகம் செய்ததால் நாக என்னும் பெயர் கொண்ட இவனுக்கு சோர எனும் பெயர்ப் பதமும் சேர்க்கப்பட்டது. இவன் விகாரைகளை அழித்துப் பாவச்செயல்கள் செய்ததாக அறியப்படுகின்றான்.

**குட்டதீசன் (கி.மு. 50-47)**

குட்டதீசன் அல்லது குடதீசன் என்பவன் கி.மு. 50 தொடக்கம் கி.மு. 47 வரை இலங்கையின் அநுராதபுரத்தை ஆண்ட அரசனாவான். இவனுக்கு முன் சோரநாகன் என்பவன் அரியணையில் இருந்தான். இவனுடைய ஆட்சிக்குப் பின் முதலாம் சிவன் ஆட்சியேறினான். இவனுடைய தந்தை தான் மகசுழி மகாதீசன். இவனுடைய மனைவியே இலங்கா புரியின் முதல் அரசியான அனுலாதேவி.

**முதலாம் சிவன் (கி.மு. 47)**

முதலாம் சிவன், கி.மு. 47 ஆம் ஆண்டில் இலங்கையின் அநுராதபுரத்தை ஆண்டஅரசன். இவன் குட்ட தீசன் எனும் அரசனின் பின் ஆட்சி பீடம் ஏறியவன். இவனின் பின் வாதுகன் என்னும் தமிழன் ஆட்சி பீடம் ஏறினான்.

**வாதுகன் (கி.மு. 47)**

வாதுகன் இலங்கையின் அநுராதபுர இராச்சியத்தை கி.மு. 47 ஆம் ஆண்டில் ஆண்டு வந்தவன். இவனுக்கு முன் முதலாம் சிவன் நாட்டை ஆண்டு வந்தான். இவனின் பின் தருபாதுகதீசன் ஆட்சிபீடம் ஏறினான்.

**தருபாதுகதீசன் (கி.மு. 47)**

தருபாதுகதீசன் கி.மு. 47 ஆம் ஆண்டு இலங்கையின் அநுராதபுரத்தை ஆண்டு வந்த அரசன் ஆவான். இவனுக்கு முன்பு வாதுகன் ஆட்சிபீடம் ஏறியிருந்தான். இவனுக்குப் பின் நீலியன் என்பவன் ஆட்சி பீடம் ஏறினான்.

**நீலியன் (கி.மு. 47)**

நீலியன் என்பவன் இலங்கையின் அநுராதபுரத்தை கி.மு. 47 ஆம் ஆண்டு ஆட்சி செய்த மன்னனாவான். இவன் தருபாதுகதீசனை வென்று ஆட்சியைக் கைப்பற்றினான். இவனின் பின் அனுலாதேவி ஆட்சியேறினாள். நீலியன் ஒரு தமிழன் ஆவான்.

**அனுலாதேவி (கி.மு. 47-42)**

அனுலாதேவி கி.மு. 47 தொடக்கம் கி.மு. 42 வரை இலங்கையின் அநுராதபுரத்தை ஆண்டஅரசி. இவளே இலங்கையை ஆண்ட முதல் அரசி அரசியாவாள். இவள் ஒரு காமவெறி பிடித்தவளாக கருதப்படுகிறாள்.

சோர நாகன் என்ற மன்னன் ஆட்சியிலிருந்த போது, அவனது மனைவியாக இருந்த அனுலா தேவியின் விபரீத காம ஆசையால் ஆட்சி அதிகாரம் பகிர்ந்து கொள்ளப்பட்டது. அனுலாதேவி தனது கணவனை நஞ்சூட்டிக் கொன்றபின், குட்டதீசன் என்பவனை மணந்து அவனை அரசனாக்கினாள். அதன் பின்னர் முதலாம் சிவன், வாதுகன், தருபாதுகதீசன், நீலியன் என ஒவ்வொருவராக மணந்து மன்னனாக்கிப் பின்னர் நஞ்சூட்டிக் கொன்று இறுதியில் தானே நாட்டின் தலைமையை ஏற்றுக்கொண்டாள்.

அவளது ஆசைக்கும் விருப்பத்திற்கும் 32 அரண்மனைக்காவலர் உட்பட்டனரென வரலாறு கூறுகிறது. வாதுகன், நீலியன் ஆகிய இருவர் தமிழராவர். இவர்கள் அனுலாவுடன் அநுராதபுரச் சிம்மாசனத்தில் அமர்ந்து ஆட்சி புரிந்துள்ளனர். தருணம் பார்த்திருந்த மகசூழியின் இரண்டாவது மகனான குடகன்ன தீசன் அனுலா மற்றவர்களைக் கொன்றது போலவே இவளையும் நஞ்சூட்டிக் கொன்று பழிதீர்த்துக் கொண்டான்.

**குடகன்னதீசன் (கி.மு. 42 -20)**

குடகன்னதீசன் அநுராதபுர இராசதானியை ஆண்ட அரசனொருவனாவான். கி.மு. முதலாம் நூற்றாண்டில் அநுராதபுரத்தை கி.மு. 42 தொடக்கம் கி.மு. 20 வரை இவன் ஆட்சி செய்து வந்தான். இவன் 22 ஆண்டுகள் அரசை ஆண்டு வந்தான். இவன் மகசுழி மகாதீசனின் மகன் ஆவான். இவன் முன் அனுலாதேவி ஆட்சியில் இருந்தாள். இவனுடைய மகன் பட்டிகாபயஅபயன் இவனின் பின் ஆட்சியேறினான். இவனால் சில விகாரைகள் அமைக்கப்பட்டதுடன் விவசாயப் பணியிலும் வளர்ச்சியிலும் இவன் ஈடுபட்டதாக மகாவம்சத்தில் குறிப்பிடப்படுகின்றது.

**பட்டிகாபய அபயன்**
**(கி.மு. 20 -கி.பி.09)**

பட்டிகாபய அபயன் அநுராதபுரத்தை கி.மு. 20 தொடக்கம் கி.பி. 09 வரை ஆட்சி செய்து வந்த அரசன். இவனுக்கு முன்பு குடகன்னதீசன் ஆட்சியில் இருந்தான். இவனின் பின் மகாதாதிக மகாநாகன் ஆட்சிபீடம் ஏறினான். இவனின் தந்தையே குடகன்னதீசன் ஆவான்.

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது கி.மு வரலாற்றுக் காலத்தினை உள்ளடக்கிய 250 ஆண்டுகளில் மூன்றிலொரு பகுதியில் தமிழரின் ஆட்சி நடைபெற்றதைப் பாளிநூல்கள் கூறுகின்றன எனலாம்.

**மகாதாதிக மகாநாகன்**
**(கி.பி. 09 - 21)**

கி.பி. முதலாம் நூற்றாண்டில், அநுராதபுரத்தை மகாதாதிகமகாநாகன் கி.பி. 09 - 21 வரை ஆட்சி செய்து வந்தான்.

இவன் தன்னுடைய சகோதரனான பட்டிகாபய அபயனின் பின் ஆட்சி ஏறியவன். இவனின் பின் இவனது மகன் அமந்தகாமினி அபயன் ஆட்சி பீடம் ஏறினான்.

**அமந்தகாமினி அபயன்**
**(கி.பி. 21 - 30)**

கி.பி. முதலாம் நூற்றாண்டில் அநுராதபுரத்தை அமந்தகாமினி அபயன் கி.பி. 21 - 30 வரை ஆட்சி செய்து வந்தான். இவன் தன்னுடைய தந்தையான மகாதாதிகமகா நாகனின் பின் ஆட்சி ஏறியவன். இவ்வரசனின் பின் இவனது சகோதரன் கனிராசனுதிசன் ஆட்சிபீடம் ஏறினான்.

**கனிராஜனு தீசன்**
**(கி.பி. 30 - 33 )**

கனிராஜனு தீசன் கி.பி. முதலாம் நூற்றாண்டில் அநுராதபுரத்தை 30 - 33 வரை ஆட்சி செய்து வந்தான். இவன் தன்னுடைய சகோதரனான அமந்தகாமினி அபயனின் பின் இவன் ஆட்சிஏறினான். இவனின் பின் இவனது மைத்துனன் சூலபாயன் ஆட்சியேறினான்.

**சூலபாயன் (கி.பி. 33 - 35)**

சூலபாயன்கி.பி. முதலாம் நூற்றாண்டில் அநுராதபுரத்தை 33 - 35 வரை ஆட்சி செய்து வந்தான். இவனுடைய மாமனான கனிராஜனுதீசனின் பின்னர் இவன் ஆட்சிக்கு வந்தான். இவனின் பின் இவனது சகோதரியான சீவலி ஆட்சி பீடம் ஏறினாள்.

**சீவலி(கி.பி.35)**

சீவலிகி.பி. முதலாம் நூற்றாண்டில், அநுராதபுரத்தை கி.பி. 35 ஆம் ஆண்டில் ஆட்சி செய்து வந்தாள். இவள் தனது சகோதரனான சூலபாயனின் பின்பு ஆட்சிக்கு வந்தாள். அதன் பின் 3 ஆண்டு காலம் அநுராதபுர இராச்சியம் குழப்ப நிலையில் இருந்தது. சிறிது காலங்கள் கழித்துப் பின் இவளது மைத்துனனான இளநாகன் ஆட்சி பீடம் ஏறினான்.

**அராஜக காலம் (கி.பி 35-38)**

3 ஆண்டு காலம் அநுராதபுர இராச்சியம் குழப்ப நிலையில் இருந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பளையில்...

யடி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஏ9 வீதியில் பாதை மாறுவதற்காக துவிச்சக்கரவண்டியில் வீதியின் ஓர மாக நின்று கொண்டிருந்த மாண வனை யாழ் நோக்கி வேகமாக பய ணித்த கப் ரக வாகனம் ஒன்று மோதித் தள்ளியதில் இவ்விபத்து இடம்பெற் றுள்ளது.

இதில் பளை முல்லையடியைச் சேர்ந்த ராஜபாஸ்கரன் ஜதுர்சிகன் (வயது-12) என்ற மாணவனே உயிரி ழந்துள்ளான்.

விபத்தை ஏற்படுத்திய கப் ரக வாக னம் தப்பி சென்றுள்ளதாகவும் பளை பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,33,104,316)

## வரணியில்...

விற்குட்பட்ட வரணி-சிட்டிவேரம் ஆல யம் முன்பாக நேற்று புதன்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பணி நிமிர்த்தமாக கொடிகாமம் வந்து மீண்டும் கரவெட்டி நோக்கி மோட்டார்சைக்கிளில் பயணித்த குடும் பஸ்தர் வீதி வளைவில் கட்டுப்பாட் டினை இழந்து மரத்துடன் மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இதில் கரவெட்டி வடக்கைச் சேர்ந்த 34 வயதான புஸ்பராசா ராஜ்குமார் என்ற குடும்பஸ்தரே சம்பவ இடத்தில் பலியாகியுள்ளார்.

இவருக்கு அண்மையில் திரு மணம் இடம்பெற்றதாக தெரிவிக்கப் படுகிறது.

உயிரிழந்தவரின் சடலம் மீட்கப் பட்டு சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் விபத்துத் தொடர்பான மேல திக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்ற னர். (ம-7,30,60,104)

## உள்ளகக்...

சீரமைப்பு செயற்றிட்டம் தொடர்பில் பல் வேறு கேள்விகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையிலேயே மத்திய வங்கி ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

உள்ளகப் பொதுக்கடன்களின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்து வதே உள்ளகக் கடன்மறுசீரமைப்பு செயற்றிட்டத்தின் பிரதான நோக்க மென சுட்டிக்காட்டியுள்ள ஆளுநர் நந்தலால் வீரசிங்க, இம்முன்மொழிவு கள் சர்வதேச நாணய நிதியத்தின் அனுசரணையுடன் பெரும்பாகப் பொருளாதாரக் குறிகாட்டிகளை மேம் படுத்துவதை அடிப்படையாகக் கொண்டிருப்பதாகவும், அதன்மூலம் எதிர்வரும் காலங்களில் முன்னோக்கிப் பயணிக்கும்போது ஏற்படத்தக்க அச் சுறுத்தல்களைக் குறைத்துக்கொள்ள முடியும் என்றும் நம்பிக்கை வெளியிட் டுள்ளார்.

அதேவேளை சர்வதேச கடன்வழங் குனர்களுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் சர்வதேச கடன்மறுசீரமைப்பு செயன்முறையில் எந்தவொரு எதிர் மறைத்தாக்கத்தையும் ஏற்படுத்தாத வகையிலேயே உள்ளகக் கடன்மறு சீரமைப்பு செயற்றிட்டம் தயாரிக்கப்பட் டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள் ளார். (ம-7)

## யாழ்.பல்கலை...

திற்கு மாணவர்களால் ஈகச் சுடரேற்றி மலரஞ்சலியும் செலுத்தப்பட்டதோடு ஒரு நிமிட அகவணக்கமும் செலுத்தப் பட்டது.

மேலும் முல்லைத்தீவு மாவட்டத் தின் புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதி யில் கரும்புலிகள் நாள் நினைவுகூரப் பட்டது.

பொது இடங்களில் வைத்து கரும் புலிகள் நாள் நிகழ்வுகளை நடத்த பொலிஸ் மற்றும் புலனாய்வாளர்கள் தடை விதித்துள்ள நிலையில் தாயக நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவின் ஏற்பாட்டில் இந்த நினைவுகூரல் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங் கரிக்கப்பட்ட இடத்தில் கரும்புலி களை மக்கள் நினைவுகூர்ந்துள்ளார் கள்.

முல்லை ஈசன் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் கரும்புலிகளின் பொது திருவுருவப்படம் வைக்கப்பட்டு படத்திற்கான பொதுச்சுடரினை தாயக விடுதலைப் போரில் நான்கு பிள்ளை களை அர்ப்பணித்து அதில் ஒருபிள்ளை கரும்புலியாகவும் மண்ணுக்கு வித்தான பிள்ளைகளை பெற்றெடுத்த தாயா ரான புஸ்பராணி ஏற்றிவைத்தார். (ம-7)

## நிறுத்தப்பட்ட...

கடந்த வருடம்நாடு திவால்நிலைக்கு சென்றதால் அனைத்து வெளிநாட்டு நிதியுதவிகளும் நிறுத்தப்பட்டு பல வேறு துறைகளில் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் வேலைத்திட்டம் காரணமாக பொருளாதாரம் படிப்படி யாக ஸ்திரத்தன்மை அடைந்து வருவ தாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை விரிவான கடன் மறு சீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பாக உள்ளூர் மற்றும் சர்வதேச பங்காளி களுடன் கலந்துரையாடி வருவதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரி வித்துள்ளார். (ம-7)

## நீதிமன்ற...

என வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற "நீதிமன்றங்களில் நீதி விசா ரணைகளில் தாமதம் மற்றும் அதற் கான காரணங்கள்" தொடர்பான ஒத்தி வைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-7)

## எதிர்க்கட்சித்...

பாராளுமன்றம் நேற்று புதன் கிழமை காலை 9.30 மணிக்கு கூடிய நிலையில், சபாநாயகர் அறிவிப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில், 2023.06.29 அன்று நடைபெற்ற அரசாங்க நிதி பற்றிய குழுக் கூட்டத்தில் எதிர்க் கட்சித் தலைவர் கலந்துகொண்ட தாகவும், இதன் போது அவருக்கு கருத்துத் தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட வில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ஆகியோரால் 2023.06.30 அன்று நடைபெற்றபாராளு மன்ற அலுவல் கள்பற்றிய குழுக் கூட்டத்தின்போதும் 2023.07.01 அன் றைய பாராளு மன்ற சபையிலும் எனது கவனத் துக்குக் கொண்டு வந்தனர். அது தொடர்பில் என் னிடம் தீர்மான மொன்றை கோரி யிருந்தனர்.

இது தொடர் பில் நிலையியல் கட்டளைகள் மற் றும் பாராளுமன்ற மரபுகள் என்னால் ஆராயப்பட்டது. அதற்கமைய, பாராளுமன்ற சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக் களின் பிரதித் தவிசாளர், சபை முதல் வர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய பதவிகளுக்கு பாராளுமன்ற கட்டமைப்புக்குள் சிறப்புரிமைகள் காணப்படுகின்றமையினாலும், இந் தப் பதவிகளை வகிக்கும் உறுப்பினர் களுக்கு குழுக்களின் அலுவல்கள் தொடர்பில் தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு ஒரு பரந்த இடம் காணப் படுகின்றமையினாலும், அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் தலைவிக்கு நிலையியல் கட்டளைகள் 121(1)இன் பிரகாரம், எதிர்க்கட்சி உறுப்பினர் ஒரு வர் நியமிக்கப்பட்டுள்ளதாலும், இவ் வாறான கூட்டங்களுக்கு எதிர்க்கட்சித் தலைவரோ அல்லது மேலே குறிப்பிட்ப் பட்ட பொறுப்பான பதவி வகிப்பவர் களை அழைப்பது பொருத்தமற்றது.

இதனால் குறித்த கூட்டத்தின் தகவல்களை எதிர்க்கட்சித் தலை வருக்கு வழங்க குழுவின் தலைவரி னால் நடவடிக்கை எடுக்கப்பட வேண் டும் என்றார். (ம-7)

## வவுனியாவில்...

அதிகாலை இவ்விபத்து இடம்பெற் றுள்ளது.

இதில் வவுனியா குருமன்காடு பகுதி யைச் சேர்ந்த சிவகுமார் ருபீன்ஸ்ராஜ் (வயது-24) என்ற இளைஞனே உயிரி ழந்தவராவார். (ம-7,299)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 05/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1621
வெற்றி இலக்கங்கள்
தனுசு 8 0 6 6 0 0
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.07.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1196
T 02 15 57 67
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

கொவிசெத
திகதி 2023.07.05
சீட்டிழுப்பு இலக்கம் 3408
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
P 33 50 76 77
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 05/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1514
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
P 21 28 38 44 64

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.05
சீட்டிழுப்பு இலக்கம் 475
வெற்றி இலக்கங்கள்
மேஷம் 21 34 35 48 மேஷம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/07/05
சீட்டிழுப்பு இலக்கம் 5166
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
V 3 3 8 7 0 3
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2140 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.07.05 தினம் புதன்கிழமை
M 21 32 61 64
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,550,140/-
DLB www.dlb.lk

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி:2023.07.05
வெற்றி வாரம்: 4301
வர்ணம்: ஊதா
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,000,000.00
வெற்றி இலக்கங்கள் 06 18 53 57 ஆங்கில எழுத்து W
DLB வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,862,518.20
திகதி 2023-07-05
வெற்றி வாரம் 3852
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 02 31 42 43 மகரம்
DLB
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,982,680/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 30 14 16 41 42
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1316
திகதி 2023.07.05 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 413,352,684.20
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி : 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.07.05
வெற்றி வாரம் : 1936
வர்ணம் : மஞ்சள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 44,670,475.20
வெற்றி இலக்கங்கள் 06 08 24 25 ஆங்கில எழுத்து T
DLB வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 1966
வர்ணம் : ரோஸ்
சீட்டிழுப்பு திகதி : 2023.07.05
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 55,142,782/-
வெற்றி இலக்கங்கள் 10 24 43 65 ஆங்கில எழுத்து L
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத நல்லிணக்கத்தை பாதுகாக்க விரைவில் புதிய சட்டம் - அமைச்சர் விதுர

(கொழும்பு)

மத நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எதிராக புதிய சட்டம் கொண்டு வரப்படும் என புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

பேச்சுச் சுதந்திரம் அல்லது மத் சுதந்திரம் என்ற போர்வையில் எந்த மதத்தையும் அவமதிக்க யாருக்கும் உரிமை இல்லை என்றும் அமைச்சர் வலியுறுத்தினார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க,

நமக்கே உரிய கலாச்சாரம் மற்றும் உணவு முறைகளில் இருந்து விலகியதன் காரணமாக நாம் நோய்வாய்ப்பட்ட தேசமாக மாறிக்கொண்டிருக்கிறோம். பணத்திற்கு முன்னுரிமை அளிக்கும் சூழலில், இன, மத அடிப்படையில் மோதல்கள் ஏற்படும். போதைப்பொருள் பிரச்சினையும் தலை தூக்குகிறது. சிலர் மத சுதந்திரம் என்ற போர்வையில் ஏனைய மதங்களை விமர்சிக்கிறார்கள். மத சுதந்திரம் என்ற போர்வையில் எந்த மதத்தையும் ஒடுக்கவும், மத நல்லிணக்கத்தை அச்சுறுத்தவும் யாருக்கும் உரிமை இல்லை. இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க புதிய சட்டமொன்றை கொண்டுவர எதிர்பார்க்கிறோம். எந்த மதத்தையும் இழிவு படுத்தாத வகையில் அதற்கான சட்ட வரைபை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றார். (ம-7)


VILLAGE HOTEL JAFFNA EXPRESS
யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...

கட்டணம் - 2800/=
(16033)
T.P:077 544 8503

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.



Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
(C-6874)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

STUDY, WORK LIVE IN CANADA
கனடாவில் உயர்கல்வி, வேலைவாய்ப்புகள், குடும்பத்துடன் நிரந்தர வதிவிடம், ஆலோசனைகள் - கருத்தரங்கு
(C-6874)
09-07-2023 ஞாயிறு காலை - 11 மணி
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
முற்பதிவு அவசியம் 0777-068-777

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- சுன்னாகம் - சாவ்கச்சேரி அரச தனியார் பேருந்துகள் செல்லும் வீதி
- பிரதான காபற் வீதி முகப்புடன் மூன்று இலட்சம் ரூபாய் 300,000/= பின் துண்டு காணிகள் ஒரு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் 150,000/=
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.
(16204)
076 826 0354
076 057 0354

பணியாளர் தேவை
சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றுக்கு கொத்து ரொட்டி போடுதல், பிறைட்ரைஸ் தயாரித்தல், ரொட்டி வேலை செய்தல், உணவு பரிமாறுதல் போன்ற வேலைகளில் அனுபவம் வாய்ந்த பணியாளர் தேவை.
(C-6874)
077 649 1027

விற்பனையாளர் தேவை
யாழ் நகரில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு வியாபார அனுபவம் உள்ள ஆண்/ பெண் விற்பனையாளர் தேவை.
சிவகணேசன் TEX TILES
41, பெரிகடை வீதி,
யாழ்ப்பாணம்.
(16207)

10 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

அமரர்
சதாசிவம் பரமேஸ்வரன்
அன்னை மடியில் 06.08.1949
ஆண்டவன் அடியில் 25.06.2013
திதி : ஆனி அமரபக்க திருதியை
ஆண்கேள் பத்து ஆனாலும் ஆறாது எம் துயரம்
உங்கள் நினைவுகள் என்றும் பசுமையானது
எங்களை தாங்கிய எம் குலவிளக்கே
உங்களை எம் இதயத்தில் பூஜிக்கின்றோம்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
"தெய்வபதி"
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.
(16206)
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் நவக்கிரி பகுதியில்
34 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
நிலப்பரப்பு
- நவக்கிரி மாணிக்க பிள்ளையார் கோயில் வீதியில்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- 3 வருடங்கள் பூர்த்தி அடைந்த தென்னைகள் உள்ளன.
- நிலாவரை வற்றாக்கிணற்றில் இருந்து 1 km தூரம்
- 1 பரப்பின் விலை 1200000 (பன்னிரண்டு இலட்சம்)

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம்
மாலை 6 மணிவரை
தொடர்புகளுக்கு: ஜெயம் (16205)
077 814 7389, 077 986 5457

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
சிற்றுண்டிச்சாலைகள் நடாத்துவதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது 2023/2024
1. நியதிகள், நிபந்தனைகள் உள்ளடக்கியதான விரிவான கேள்வி கோரல் விபரத்தினை அலுவலகத்தில் பார்வையிட முடியும்.
2. விண்ணப்பப் படிவங்களை 07.07.2023 முதல் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
3. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை 31.07.2023 மு.ப 11.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலாகவோ அலுவலகத்திற்கு
அதிபர்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
4. கடித உறையில் வலப்பக்க மேல் மூலையில் 'சிற்றுண்டிச்சாலைகள் கேள்வி மனுக்கோரல்' என குறிப்பிடவும்.
5. அதிகாரம் பெற்ற கேள்விச்சபை திகதி 31.07.2023 மு.ப 1.00 மணிக்கு கூடி கேள்விப்பத்திரம் திறக்கப்பட்டு இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.
6. இது சுருக்கமான விளம்பரமாகும்.
C-6872
அதிபர்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.